விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 31 வியாழக்கிழமை (17.10.2002) | தொலைபேசி- 2223378 | ஒலி 302

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## அம்பாறையில் மீண்டும் பதற்றம்

# அக்கரைப்பற்று முஸ்லிம் இளைஞனை இனந்தெரியாதோர் கடத்தினர்

### நிலைமையை சமாளிக்க முடிவற்ற ஊரடங்கு

(அம்பாறை நிருபர்)

**அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார். இச் சம்பவத்தினால் அங்கு ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையை தணிக்க நேற்று நண்பகல் முதல் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த அப்துல் பஜாஜ் என்னும் முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றால் கடத்தப்பட்டதை அடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இந்த இளைஞரை விடுதலை செய்யுமாறு அப்பகுதி மக்கள் மேற கொண்ட ஹர்த்தாலை அடுத்து அங்கு அமைதி இன்மை ஏற்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட முஸ்லிம் இளைஞர் தமிழ் அமைப்பொன்றுடன் தொடர்பு வைத்திருந்ததுடன் அதன் தீவிர ஆதரவாளர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞரைக் கடத்திய குழு இவரது பெயரைக் கூறி அழைததாக சம்பவத்தை நேரில் கண்ட எச்.எம்.ரமேஷ் என்னும் இளைஞர்

(10ம் பக்கம் பார்க்க)



வன்னி சென்ற ஐரோப்பிய ஒன்றிய ராஜதந்திரிகள் அடங்கிய குழுவினரை தமிழ்ச்செல்வன் வரவேற்பதை படத்தில் காணலாம்.

## ஐரோப்பியத் தூதுக் குழுவினர் அன்ரன் பாலசிங்கத்துடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

கொழும்புக்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய இராஜதந்திரிகள் அடங்கிய குழுவினர் நேற்று வன்னி சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் உயர் மட்டப் பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பு தமிழீழ அரசியல் துறை மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்றது. இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் அனரன் பாலசிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுபாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அடேல் பாலசிங்கம் ஆகியோரும், ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த மார்க்கஸ் புறுமோறோ, ஏடன் மார்க், வெளிவிவகார உதவி அமைச்சர் பீற்றர் ஹோல் சான்ஸ்ரன், டென்மார்க் வெளியுறவு

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடை நீக்கம் குறித்து பிரிட்டன் ஆராயும்

### அந்நாட்டு பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னேற்றகரமாக செல்லுமாயின் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பிரிட்டனில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என அந் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் காரத்

சிகள் குறித்து விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தவே இலங்கைக்கு வந்துள்ளேன்.

சமாதான நடவடிக்கைகளில் விடு தலைப்புலிகள் அதிக சிரத்தை காட்டி வருகின்றனர். இதனால் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து கூடிய கவனம் செலுத்த

## யாழ் ரெலிகொம்மின் வள நிலையை டாக்டர்கள் புரிந்து கொள்ளவில்லை

அடங்கிய குழுவினர் நேற்று வன்னி சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் உயர் மட்டப் பிரமுகர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் அனரன் பாலசிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப புறுமோறோ, ஏடன் மார்க், வெளிவிவகார உதவி அமைச்சர் பீற்றர் ஹோல் சான்ஸ்ரன், டென்மார்க் வெளியுறவு

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ் ரெலிகொம்மின் வள நிலையை டாக்டர்கள் புரிந்து கொள்ளவில்லை

## பொறியியலாளர் அன்ரனிதாஸன் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு, வதிவிடத் தொலைபேசி வழங்குவது குறித்து யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சிபார்சு செய்து விபரங்களை சமர்ப்பித்தால் வைத்தியர்களுக்கான வதிவிடத் தெலைபேசிகளை முன்னுரிமைக் கட்டணம் இன்றி வழங்கமுடியும்.

இவ்வாறு யாழ்.ரெலிக்கொம் நிறுவன பொறியியலாளர் எஸ். அன்ரனிதாஸன், அவரது அலுவலகத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

# அந்நாட்டு பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னேற்றகரமாக செல்லுமாயின் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது பிரிட்டனில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது குறித்து கவனம் செலுத்தப்படும் என அந் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் காரத் தோமஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து விடுதலைப்புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தவே இலங்கைக்கு வந்துள்ளேன்.

சமாதான நடவடிக்கைகளில் விடு தலைப்புலிகள் அதிக சிரத்தை காட்டி வருகின்றனர். இதனால் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து பிரித்தானிய அரசாங்கத்திற்கு விளக்கமளிக்க உள்ளதாகவும் காரத் தோமஸ் மேலும் கூறினார். (த)

# உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணை நவ. 15ல்

(கொழும்பு)

2001 டிசம்பர் 5 ஆம் திகதி தேர்தல் தினத்தன்று கண்டி, உடத்தலவின்ன என்ற இடத்தில் பத்து முஸலிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ம் திகதி நடைபெறவுள்ளது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எரிக் பசநாயக்க(தலைவர்) தீபனி விஜயசுந்தர, ராஜபக்ஸ ஆகியோர் முன்னிலையில் ட்றயல் அற்பார் முறையில் விசாரணைகள் நடைபெறும்.

(10ம் பக்கம் பாரக்க)

# ஜனாதிபதியின் மேடைப் பேச்சுக்கள் அவரின் மதிப்பைக் குறைக்கின்றது

## ஸ்ரீ.சு.கட்சி மூத்த உறுப்பினர் திலகரத்ன கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மைக்காலத்தில் பொது மேடைகளில் பேசும் விதம் அவர் வகிக்கும் பதவியின் மதிப்பை மோசமாகப் பாதிக்கிறது என்று முன்னாள் சபாநாயகரும் ஸ்ரீ.ல.சு. கட்சியின் மூத்த உறுப்பினருமாகிய ஸ்ரான்லி திலகரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அண்மைக்காலப் பேச்சுக்கள் ஒரு அரசுத் தலைவியின் தரத்திற்குரியவையல்ல, தொடாந்தும் இதேபாணியில

(10ம் புக்கம் பார்க்க)


கணனி தொழில் நுட்பத்தோடு, விஞ்ஞான முறைப்படி ஆய்வுகூடத்தில் தரம் உறுதி செய்யப்பட்டது

சமநிலை போசனைப் பதார்த்த கலவையானது




சீ.ஐ.சீ. உரம்

இலங்கையில் சர்வதேச தரம் 9001 ஐ உறுதிப்படுத்திய ஒரே உரம் இதுவே

CIC

சீ.ஐ.சீ. பேர்டிலைசர் (பிறைவேட்) லிமிட்டெட்
205.டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை
கொழும்பு – 10

Telephone : 01-688200-2 Fax : 01-691909 E.mail: cicf @sltnet.lk Website: www.cicagribusinesses.com

அம்பாறை மாவட்டத்துக்கு

# மனித உரிமை ஆணைக்குழு நேற்று விஜயம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்ட காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படையினர் நடத்திய தாக்குதல் சம்பவம் குறித்து ஆராய மனித உரிமை ஆணைக் குழுவினர் நேற்று அங்கு சென்றனர்.

மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் றொட்றிக் குணதிலகவின் ஏற்பாட்டில் 4 பேரை கொண்ட குழுவே நேற்று விஜயம் செய்தது.

இவர்கள் காஞ்சிரங்குடாவில், சம்பவம் இடம் பெற்ற பிரதேசத்திற்கும், அக்கரைப் பற்று பொலிஸ் நிலையத்துக்கும் விஜயம் செய்தனர்.

அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், போர் நிறுத்த கண் காணிப்பு குழு பிரதிநிதிகளையும் சந்தித்து இவ் விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர். (உ-8)

# மக்கள் வங்கிகளில் அடகு நகைகளை மீள பெற்றுக்கொள்ளலாம்

(தென்மராட்சி)

மக்கள் வங்கியில் நகை அடகு வைத்து தமது நகைகளை மீளப் பெறுவதற்குப் பணம் கட்டியவர்களின் அடகு நகைகள் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

மார்ச் மாதத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் வரை பணம் கட்டியவர்களுடைய நகைகளே இவ்விதம் கொண்டு வரப்பட்டுள்ளன.

எனவே, அடகு நகைகளுக்காகப் பணம் கட்டியவர்கள், தமது நகைகளை அந்தந்தக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்என மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இதே,வேளை ஊர்காவற்றுறை கிளைக்குரியவர்கள் தமது அடகு நகைகளை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (77)

## முதலுக்கு ஒரே நியாயம்!

சாவு தவிர்க்க முடியாதது என்பதைக் கையிலே வைத்துக் கொண்டு தான் வாழ்வை அறிவுறுத்தினான் அவன்.

போகிகளையோகிகளாக்கி, தேனீக்களை ஞானிகளாக்கி, வேந்தர்களை வேதாந்திகளாக்கி, பித்தர்களைச் சித்தர்களாக்கி, காமிகளை சாமிகளாக்கி, எல்லாம் பொய்யெனச் சொல்ல வைத்தது எது?

போவதெல்லாம் போகட்டுமென்றவிரக்தி மனப்பான்மையைத் தருவது எது?

வாடகைக்கு குடிபுகுந்தவனைப் போல், எப்போதும் மூட்டை முடிச்சுகளைக்கட்டிக் கொண்டு, வீட்டைக் காலி செய்யத் தயாராய் இருக்கும்படி செய்வது எது?

'பட்ட கடனுக்கு வந்து பிறந்தேன்; இந்தக் கடனை இறந்து தீர்ப்பேன், என்று முடிவுகொள்ளச் செய்வது எது?

அது தான் சூன்யம்;

முதலுக்கு மேலே அதன் அரண்மனை இருக்கிறது.

முடிவுக்குக் கீழே அதன் சிறைச்சாலை இருக்கிறது.

'போய் ஒழுங்காக வாழ்ந்திரு' என்று அரண்மனை அனுப்பி வைக்கிறது.

செய்த குற்றங்களுக்கு முடிவில் சிறைச்சாலை தண்டிக்கிறது.

பெருமிதத்தோடு சிறகடித்துக்கொண்டு மனிதப்புறா அரண்மனையிலிருந்து பறந்து வருகிறது.

தாலாட்டிச் சீராட்டி வளர்க்கப் பெறுகிறது.

கூனாகிக் குருடாகிக் கதை முடிகிறது.

சிறைச்சாலைபிடித்திழுத்து அடைத்துவிடுகிறது

முதலுக்கு மேலுள்ளஅரண்மனையில் தெய்வமிருக்கிறது;

முடிவுக்குக் கீழுள்ள சிறைச்சாலையில் சைத்தான் இருக்கிறது.

தெய்வம் அனுப்பிவைக்கிறது; சைத்தான் பிடுங்கிக் கொள்கிறது;

தெய்வம் பரிசளிக்கிறது: சைத்தான் தண்டனைவழங்குகிறது.

பிறப்புக்கு முன்னுள்ள ரகசியங்களை முதலுக்கு மேலே போய்க் கேட்டால் தெரியும்;

இறப்புக்கு பின்னுள்ள அதிசயங்களை முடிவுக்குக் கீழே போய்க்கேட்டால் தெரியும்

முதலுக்கு மேலே பார்க்காமல் வந்து விட்டோம்;

முடிவுக்குக் கீழே பார்க்கத் தான் போகிறோம்.

எப்போது? என்பது தான் கேள்வி.

# புது விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி, சந்தர் மடத்தில்அமைக்கப்பட்டுள்ளயாழ். இந்து சமயப் பேரவையின் தலைமைக் காரியாலயபுதுவிழாஎதிர்வரும் 20 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ)

## நெஞ்சுறுத்தும் கானல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களை மிதிவெடிகள் மற்றும் வெடிப்பொருட்களில் இருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு யுனிசெவ் நிறுவனமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் மேற்கொண்டுள்ள விழிப்புணர்வுத் திட்டத்தின் ஓரங்கமான "நெஞ்சுறுத்தும் கானல்" நாடகம் தற்போது வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வகையில், இன்று மு.ப. 10 30 மணி மற்றும் பி. ப. 1. 30 மணிக்கு முறையே கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலையிலும், சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலையிலும் "நெஞ்சுறுத்தும் கானல்" ஆற்றுகை செய்யப்படவுள்ளது. (உ)

# நல்லூரில் முதியோர் சிறுவர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் சிறுவர் தினவிழா நேற்று நல்லூர் பிரதேச செயலர் மண்டபத்தில் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் லயன்ஸ் பி. எஸ். சொக்கலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் 40 முதியோர்கள் கௌரவிக்கப்பட்டு, அவர்களுக்கு உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

திருநெல்வேலி சைவாபிவிருத்தி சங்க சிறுவர் இல்ல சிறார்களுக்கான பரிசில்களையும்,சான்றிதழ்களையும் அந் நிறுவனத்தின் முகாமையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பெற்றுக் கொண்டார். (உ-8)

# யாழ். பல்கலையுடன் இணைந்து ஊடகவளநிலையம் ஆரம்பிப்பு

## டென்மார்க் தூதுவர் வருகை

(தென்மராட்சி)

இலங்கையின் வடமாகாணத்தில் ஊடகஅபிவிருத்தி மூலம் ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் ஏற்படுத்துவதற்குரிய செயல்திட்டங்களை அமுல்செய்யும் பொருட்டு டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் சிற்றிமண்டபத்தில் 180இலட்சம் ரூபா நிதியுதவியில் ஊடகவள பயிற்சிநிலையத்தின் திட்டஆரம்பவைபவம் நேற்றையதினம் இடம் பெற்றது.

யாழ் பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இவ் ஆரம்ப வைபவத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான டென்மார்க் தூதுவர் மைக்கேல் ஸ்ரேன்பேர்க் பங்கு கொண்டு பயிற்சி நிலையத்தின் உத்தேச செயற்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார்.

இவ் ஊடகவள பயிற்சி நிலையம் மூலம் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களாக பணிசெய்பவர்களின் தொழில்திறமைகளைப் பலப்படுத்தி மேம்படுத்தப்படும்எனவும்அதற்குரிய அனைத்து வளஏற்பாடுகளையும் யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் டென்மார்க் அரசாங்கம் செய்வதற்கு முடிவுசெய்துள்ளது எனவும் அங்கு தெரிவித்தார்.

இலங்கையில் நிரந்தரசமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் இலக்கில் ஒரு ஆரம்பமாக இத்திட்டம் இங்கு அமுல்செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தஊடகவள பயிற்சி நிலையம் அமையவுள்ள யாழ்ப்பாணம் சிற்றிமண்டபம் 12லட்சம்ரூபா செலவில் நவீனமயப் படுத்தப்படவுள்ளதாக இந்நிலையத்தின் இணைப்பாளரான பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

இவ் ஆரம்பவிழாவின்போது பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், பல்கலைக்கழக பீடாதிகள் மற்றும் விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-77)

## புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால புகைப்படங்களின்காட்சியினை இன்று தொடக்கம் நான்கு நாட்களிற்கு மு.ப.9 மணியில் இருந்து பி.ப.5 மணிவரை யாழ் பல்கலைக் கழக நூலக கேட்போர்கூடத்தில் முதுசம் நிகழ்ச்சித் தொடர்VIII ஆககலைவட்டம் ஏற்பாடு செய்துள்ளது. (உ -10)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களத்தினைச் சேர்ந்த நெசவுப்போதனாசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10மணிக்கு கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு அனைத்து போதனாசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொழிற் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் ப.ராகவன் கேட்டுள்ளார். (த-5)

செந்தூரியின்

## வித்துடல் விதைப்பு

(திருநெல்வேலி)

கடந்த திங்கட்கிழமை சுகயீனம் காரணமாக சாவடைந்த சோதியா படையணியைச் சேர்ந்த மேஜர் செந்தூரியின் வித்துடல நேற்று கோப்பாய் மாவீரர்துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

ஏ-9 பாதையூடாக எடுத்து வரப்பட்ட செந்தூரியின் வித்துடல் பொதுமக்களின் அஞ்சலியின் பின்னர் துயிலும இல்லந்தில்விதைக்கப்பட்டது. (த-43)


## ஊர்காவற்றுறை பிரதேசசபை வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவரினால் பின் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 28.10.2002ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையை ஊர்காவற்றுறை பிரதேசசபை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தலவேண்டும்.

03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர் ஊர்காவற்றுறைப் பிரதேசசபை, ஊர்காவற்றுறை இற்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விபெட்டியில இட்டு இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு 30.10.2002ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்ககூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

04. கேள்விகள் 30.10.2002ம் திகதிபி.ப 1.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்விசமர்ப்பித்தவர்கள சமுகமளிக்கலாம்.

05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபைக்கு உரிமையுண்டு.

06. மேலதிக விபரங்களை ஊர்காவற்றுறை பிரதேச்சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம். | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம். |
|---|---|---|---|
| 01. | பருத்தியடைப்பு களிக்குளம்முருகன் கோவில்வீதி புனரமைப்பு | 2000.00 | 200.00 |

குறிப்பு:

கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் 20% 'வற்' வரி செலுத்தவேண்டும்.

**நா. திருச்செல்வம்**
உப தலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

பிரதேசசபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.
16-10-2002

(5144)

## ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உயர் சிறப்புடன் மிளிர அயராது

# உழைத்தவர் அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம்

கல்விமான் ஒறேற்றர் (ORATOR) சுப்பிரமணியம் ஒறேற்றர்என்ற அடைமொழி பெற்றது எவ்வாறு என்பதை அறிய எவரும் விரும்புவர். ஒறேற்றர் என்பது ஆங்கிலச் சொல்லின் தமிழ் உச்சரிப்பாகும். அதன் அர்த்தம் சிறந்த பேச்சாளன் சுப்பிரமணியத்திற்கு ஒறேற்றர் என்றபட்டம் சிறுவயதிலேயே யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அவர் கற்றகாலத்தில் அவரதுஅதிபர் நெவின் செல்லத்துரையால் வழங்கப்பட்டது. எழுந்தமானப்பேச்சொன்றுநிகழ்த்தும்படிஅதிபர் நெவின் செல்லத்துரை பணித்ததும் சுப்பிரமணியம் (Ideals in Life) வாழ்க்கையின் லட்சியங்கள் என்னும் பொருள்பற்றி அழகாகப் பேசியதைக்கேட்டுப் பெருமையடைந்தார். அதிபர்நெவின் செல்லத்துரை சுப்பிரமணியத்தைப்பார்த்து (You will be an Orator one day) நீ ஒரு சிறந்த பேச்சாளனாக வருவாய்என்று வாழ்த்தினார். அதிபர் மாணவனுக்கு சூட்டியபட்டம் இறுதிவரை மாணவனை அலங்கரித்தது.

### ஆசிரியராய் அதிபரானார்

மாவீரன் நெப்போலியனைப்போன்ற சிறியதோற்றம் உடையவர். தேசிய உடையை அணிபவர்அகன்ற நெற்றியில் வீபூதிப்பட்டையாக தீட்டப்பட்டிருக்கும். சிந்தனைதோய்ந்த முகத்தில் தேவைக்குஏற்ப சிரிப்பு வெளிப்படும். சிற்றம்பலத்தின் மகனாக 1902 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ம்திகதி பிறந்த சுப்பிரமணியம் எல்லோராலும் போற்றப்பட்ட கல்விமானாக விளங்கினார். மானிப்பாய் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரி,

ஆகிய கல்லூரிகளில் கல்வி கற்று; முதலில்மானிப்பாய்இந்துக் கல்லூரியிலும் அதன்பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் ஆசிரிய சேவை புரிந்தார். 1945 ம் ஆண்டு கந்தரோடையிலுள்ள ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்குஅதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றார். 1962 ம் ஆண்டு ஒய்வு பெறும் வரைக்கும்அவர் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் அதிபராககடமை யாற்றினார் அவர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைப் பொறுப்பேற்ற போது300மாணவர்கள் அங்கு கல்விசற்றனர். கல்லூரியிலிருந்து ஒய்வு பெறும் போது 2200மாணவர்கள் அங்குகல்வி கற்றனர்.

ஒறேற்றரின்ஆளுமையாலும் அயராத உழைப்பினாலும் அர்ப்பணிப்புள்ள சேவையாலும் தூர திருஷ்டியினாலும்

> **இன்று ஒறேற்றர் சுப்பிரமணியத்தின்**
> **நூறாவது பிறந்தநாள்**
> **கொண்டாடப்படுகிறது.**

ஒருசிறு பாடசாலைஒருகலைக் கோயிலாக புகழ் பரப்பி நாட்டின் நாலாபக்கங்களிலுமுள்ள மாணவர்களை கவர்ந்தது.

### ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின்புகழ்

அவர்ஒய்வுபெறுவதற்குமுன் 1961 ம் ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர் தொகை 42 அவர்களில் 10 பேர்கொழும்பு மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவானவர்கள். அந்தப்பெறுபேறுகள் ஸ்கந்தவரோதயாவுக்கு வடமாகாணத்தில்முதல்இடத்தையும் அகில இலங்கையில் மூன்றாவதுஇடத்தையும் பெற்றுக் கொடுத்தது. அவர் ஸ்கந்தவரோதயாவின் கல்விச் சுடரை உலகறியச் செய்தார். கந்தரோடைக் கிராமத்தின் கலங்கரை விளக்காகவிளங்கினார்.

மாணவர்களின் விவேகத்தைக் கண்டு பிடித்து வளர்த்தெடுப்பதுதான் ஆசிரியரின் கடமை என்பது ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் கருத்து. அவரவர்கட்கு ஏற்றமுறையில் கல்வி கற்பித்தால் உரிய பலனைப் பெறலாம் என்பார். அதனாலேதான் அவர் அதிபராக இருந்தகாலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்கள் ஸ்கந்தவரோதயாவுக்கு படையெடுத்து அனுமதிபெற்று வாழ்க்கையில் முன்னேறினர்.

### இறுக்கமான நிர்வாகம்

அவர் காலத்தில் முகாமைத்துவக் கற்கை நெறி எவரும் கேள்விப்படாத தொன்று இன்று பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவக் கற்கை நெறி தொழில் முகாமைத்துவம், பொது முகாமைத்துவம்என்று பல்வேறுவகைகளாகப்போதிக்கப்படுகிறது. எதுவிதமுகாமைத்துவ அறிவும் இல்லாமல் ஒரு பாடசாலையைஒருகலைக் கோயிலாக்கினார் என்றால் அது அவரது திறமை, துணிவு என்றே கூற வேண்டும். அவர் ஒரு கலைப்பட்டதாரி;

ஒறேற்றர் சுப்பிரமணியம் சொல்லுவார் நான் தான் அதிபர், வேறு எவரும் இருக்க முடியாது என்று கல்லூரி நிர்வாகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டு மாணவர் நலன்கருதி அயராது உழைத்தார். அதன் பயனாக கல்லூரி உயர்ந்தது. கிராமம் மிளிர்ந்தது. தனது இறுக்கமான நிர்வாகத்தின் போது கல்வித்திணைக்களத்தின் சட்டதிட்

செஞ்சொற் செல்வர்
**ஆறு. திருமுருகன்**

டங்களை மீறினார். அதற்கு எடுத்துக் காட்டாக கல்லூரி மாணவர் தொகை அதிகரித்ததால் கட்டடங்கள் தளபாடங்கள் தட்டுப்பாடு ஏற்பட இரு நேரப்பாடசாலையை அறிமுகப்படுத்தினார். 4 ஆம் வகுப்பு தொடக்கம் 8 ஆம் வகுப்புவரை காலை 7.30 தொடக்கம் நண்பகல் 12 30 வரையும், 9 ஆம் வகுப்பு தொடக்கம் 12 ஆம் வகுப்பு வரை நண்பகல் 12. 30 தொடக்கம் மாலை 5.30 வரைக்கும் இரு நேரப்பாடசாலை நடைபெற்றது.

கல்லூரியின் இறுக்கமான நிர்வாகத்தை கடைப்பிடித்தாரெனினும் தனது ஆசிரியர்களை நன்கு மதித்து நடந்தார். அவரது நிர்வாக காலத்தில் எந்தக் கல்வி அதிகாரியையும் எந்த ஆசிரியரது வகுப்பிற்குள்ளும் போக அனுமதிக்க மாட்டார். கல்வி அதிகாரியைப் பார்த்து அவர் சொல்லுவார் எந்த ஒரு நபரும், இரண்டு எசமானுக்கும் பணிய முடியாது. எனது ஆசிரியரை எனக்குத் தெரியும். நீர் அவருடைய தராதரப்பத்திரத்தில் திருப்தி என்று கையொப்பமிடும்: இவ் வகையில் அதிபர் அவர்கள் அதிகாரம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டு நிர்வகித்தாலும் தன்னுடன் கற்பித்த ஆசிரியர்களுக்கு பெருந்துணையாக விளங்கினார்.

### கல்லூரியை உயர்த்தித் தானும் உயர்ந்தார்.

கல்வித்திணைக்களத்தின் சகல விதிகளையும் கற்றிருந்தபடியால் மாணவரை அனுமதிக்கும் விடயத்தில் மிகத் திறமையாகச் செயற்பட்டு ஸ்கந்தவரோதயாவை வடமாகாணத்தில் முதல் அதி உயர்தர கல்லூரியாக்கினார். அதன் விளைவாக அவரும் முதலாவது அதி உயர்ந்த அதிபராக உயர்த்தப்பட்டார்.

இவ் வகையில் கல்லூரியின் உயர்வினால் தானும் உயர்வு பெற்றார்.

ஒறேற்றர் சுப்பிரமணியம் ஸ்கந்தவரோதயா பரிசளிப்பு விழாக்களுக்கு கல்வி அதிகாரிகளை பிரதம விருந்தினர்களாக அழைத்திருக்கவில்லை: மாறாக கொழும்பு சகிரா கல்லூரி அதிபர், செனற்றர் அசீஸ், கொழும்பு ஆனந்தா கல்லூரி அதிபர் எஸ். ஏ. விஜயதிலக, வில்மட் பெரேரா. P. மலலசேகரா போன்றோரைப் பிரதம விருந்தினர்களாக அழைத்திருந்தார்; காரணம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மாணவர்கள் எல்லாச் சமூகத் தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டறிய வேண்டும். பரந்துபட்ட உலக அறிவு பெற வேண்டும் என்ற உள்நோக்கமேயாகும்.

### ஸ்கந்தா ஒரு குடும்பம்

ஸ்கந்தா ஒரு சந்தோசமான குடும்பம் என்று கூறும் அதிபர் சுப்பிரமணியம் 2200 மாணவர்களையும் அவர்களின் குடும்ப பின்னணியில் அறிந்திருந்தார். அதே போல் ஆசிரியரின் குடும்ப வரலாறு முழுவதையும் அறிந்திருந்தார். ஸ்கந்தா குடும்பத்திலுள்ள எவரது இன்ப துன்ப விடயங்களிலும் கலந்து கொள்ள தவற மாட்டார். அழைப்புக் கிடைக்கா விட்டாலும் வலிய சென்று வைபவத்தில் கலந்து சிறப்பிப்பார். ஒய்வு பெற்ற பின்னும் ஸ்கந்தா ஒரு சந்தோசமான குடும்பம் என்பதை தனது செயல் மூலம் நிலை நிறுத்தினார்.

ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் பெருந்தன்மை அவரை குன்றில் மேல் இட்ட விளக்காக பிரகாசிக்க செய்கிறது: விரோதிகளைக் கூட அவர் மன்னித்ததுண்டு. பிழை விடுவது மனித இயற்கை மன்னிப்பது தெய்வீகமானது என்று சொல்லுவார்.

அரசியலைப்பொறுத்தவரையில் அவர் முற் போக்கு சிந்தனை உடையவர். ஹண்டி பேரின்பநாயகம்போன்றோருடன் யாழ்ப்பாண வாலிபர் சங்கம் போன்றவற்றை உருவாக்கி அரசியல் விடுதலைக்கு உழைத்தார், பொது உடமைக் கொள்கையில் நாட்டமுடையவராகஇருந்தும்கல்வித்தொண்டில்தன்னை அர்ப்பணித்ததால்அரசியலில்அதிக ஈடுபாடு கொள்ளவில்லை, சாதி வேறுபாட்டை முற்றாக வெறுத்தவர் அதை செயலிலும் காட்டி அழியாப்புகழ் பெற்றார்.

கல்விமான் ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடும் இந் நாளில் ஸ்கந்தா ஒரு சந்தோசமான குடும்பம் என்ற அவரது உயர்ந்த இலட்சியத்தை அடியொற்றி அனைத்து கல்லூரி அதிபர்களும் தங்கள் பாடசாலைகள் சந்தோசமான குடும்பங்களாக இயங்க ஒத்துழைப்பது சாலச் சிறந்தது. ●

---

## கூத்தியல் வளர்ச்சியில் யாழ். பல்கலைக்கழகம்

# காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகிறது

### கிழக்கிலங்கை பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். மௌனகுரு

(தென்மராட்சி)

தமிழர்களின் பண்டைய கூத்துக்களை மீள் உருவாக்கம் செய்து வெளிநாடுகளில் பரவலாக மேடையேற்றப்பட வேண்டும்: அத்துடன், கூத்தியலுக்கு தனியான ஒரு பயிற்சியகம் அமைக்கப்பட வேண்டும்:

இவ்வாறு கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி எஸ். மௌனகுரு, யாழ்ப்பாணம்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் ஈழத்து தமிழ்கூத்தியல் ஆய்வுகளும் ஈழத்து தமிழ்க் கூத்தும் என்னும் தலைப்பில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரையினை ஆற்றுகையில் குறிப்பிட்டார்:

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர்எஸ். மௌனகுரு தொடர்ந்து கூறுகையில்,

தமிழ்க் கலாசாரத்தின் முக்கிய தூணாக கூத்தினை பேராசிரியர் சு. வித்தியானந்தன் அடையாளப்படுத்தினார். அவர் எப்போதும் கூத்து பற்றியே சிந்தித்து வந்தார். பேராசிரியர் வித்தியானந்தன் இதில் கால் பதித்த பின்னர் தான் கூத்தியல் ஆய்வு பரிணாம வளர்ச்சி பெற்றது: கூத்து ஒரு புலமைப் பொருள்: கூத்து மக்கள் மத்தியில் பல்வேறு விதமான மாற்றங்களை ஏற்படுத்தி வளர்த்து வருகிறது.

பேராசிரியர் வித்தியானந்தன் காலத்திலே கூத்து பற்றிய அவரது ஆய்வுவெறும் விவரணமான ஆய்வாகவே இருந்தது: கூத்தை ஆராய்வதற்கு ஒரு ஆய்வுப்படையை அவர் உருவாக்கியிருந்தார். அவரது மாணவர்கள் தான் இன்றும் தமிழ் கூத்தினை வளர்ச்சியடையச் செய்து வருகின்றனர்.

கூத்தை நாடகமாக்கியவர் பேராசிரியர் வித்தியானந்தன்: அந்த வகையில் கூத்து ஒரு ஆய்வுப் பொருளாகவும் களப் பொருளாகவும் மாற்றம் பெற்றுள்ளது. கூத்தை அவர் மேடையேற்றி இருக்கின்றார்: கூத்தை ஆராய்ந்திருக்கின்றார், படிப்பித்திருக்கின்றார்: அந்தவகையில் கூத்து ஒரு புலமைப் பொருளாக மாற்றம் பெற்றுள்ளது.

தமிழ் கூத்தியல் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகமும் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வந்துள்ளன: நாம் வெறும் பெருமைகளை மட்டுமே பேசிக் கொண்டிருப்பதால் காரியம் எதுவும் ஆகப் போவதில்லை. எனவே கூத்தியலை மீள உருவாக்கும் முயற்சியில் இரு பல்கலைக்கழகங்களும் ஈடுபட வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீடமும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தர் நுண்கலைப் பீடமும்' மிகவும் வளம் பொருந்திய இரு பல்கலைக் கழகங்களாகும். அந்த வகையில்தமிழரின்தேசிய அடையாளமாகவுள்ள கூத்தியலை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்றார்.

(உ- 77)

---

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாலர் கல்விக் கழகத்தின் 13 வது நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது:

இப்புதிய நிர்வாக சபையில் தலைவராக பா. காசிநாதனும் இணைச் செயலாளர்களாக திருமதி தெ. இரத்தின கோபால், திருமதி. ச. ஜெயபால சிங்கம் ஆகியோரும், பொருளாளராக வ. கிருஷ்ண பிள்ளையும் உப செயலாளராக பொ. சுதீசனும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேருரை நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

'நடைமுறையும் நோக்கும்' என்னும் தலைப்பில் உயர்நீதி மன்ற நீதியரசர் சி. வி. விக்கினேஸ்வரன் பேருரையை நிகழ்த்தவுள்ளார். (உ)

# 14 ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் வட கொரியரும் — தென் கொரியரும் இணைவு

## வீர வீராங்கனைகள் கோசமெழுப்பி ஆரவாரிப்பு

(சியோல்)

தென் கொரியாவில் நடந்து முடிந்த 14வது ஆசிய விளையாட்டு விழாவில் வடகொரியா கலந்து கொண்டமை இரு நாடுகளிற்குமிடையேயான உறவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு வித்திட்டுள்ளது.

கொரிய யுத்தம் முடிவுற்று சுமாா 50 வருடங்களின் பின்னர் வடகொரியப் பிரதிநிதிகள் தென் கொரியவிற்கு விஜயம் செய்தது இதுவே முதல் தடைவையாகும்.

இவ்விரு நாடுகளும் மீண்டும் இணைவது வெறும் கனவாகி விடலாம் என கருதப்பட்டவேளை வட கொரிய, தென்கொரிய வீர வீராங்கனைகள் தாங்கள் அனைவரும் ஒன்றே என்பதை வெளிப்படுத்தும் வகையில் கோசங்களை எழுப்பினர்.

வடகொரியர்கள் நாங்கள் அனைவரும் எனக் கோசம் எழுப்ப தென் கொரியர்கள் அதனைப்பூர்த்தி செய்யும் வகையில் ''ஒன்றே'' எனக்கூக் குரலிட்டனர்.

இதன் மத்தியில் அரங்கில் இருந்த ஆயிரக்கணக்கான தென்கொரியர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இதேவேளை பெண்களிற்கான மரதன ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டிய வடகொரிய வீராங்கனைகளும் போங்வில் இரண்டு கொரிய நாடுகளும் இணைவதை உறுதிப்படுத்தும் வகையில் ஆண்களிற்கான மரதன் ஓட்ட போட்டியில் தென்கொரியர் வெற்றி பெறவேண்டுமென கூறியிருந்தார்.

அதற்கேற்ப வட கொரிய வீராங்கனையின் அபிலாசையை நிறைவேற்றும் வகையில் லிபவுன்யூ தென் கொரியாவிற்கு தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொடுத்தார்.

மேலும் இங்கு விளையாட்டுப் போட்டியானது ஐக்கிய உறவின் ஆழத்தை தெளிவாகக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)

# முஷாரப்பின் நடவடிக்கையே இஸ்லாமியரின் வெற்றிக்கு காரணம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இஸ்லாமிய சமய கட்சிகளின் அதிகாரம் வேரூன்றி விட்டது என்பதையே கடந்த வாரம் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என்று அமெரிக்காவின் நியாஸ் ரைம்ஸ் மற்றும் வாஷிங்டன் போஸ்ற் நாளேடுகள், செய்தி வெளியிட்டுள்ளன.

ஜெனரல் பர்வேஷ் முஷராப் முரட்டுத்தனமாக நடந்து கொண்டு அரசியல் சாசன நடை முறைகளை முறியடித்து தம்மை தனிமைப்படுத்திக் கொண்டார் என்று நியாஸ் ரைம்ஸ் தகவல் தெரிவித்துள்ளது.

சமய சார்பற்ற கட்சிகளிற்கு எதிராக ஜெனரல் பர்வேஷ் முஷாரப் ஏற்படுத்திய நடவடிக்கைகளின் விளைவுதான் இஸ்லாமிய தீவிரவாத கட்சிகளின் கூட்டணிக்கு கிடைத்துள்ள வெற்றி என வாஷிங்டன் போஸ்ற் கூறுகின்றது. (சு-02)



வெனிசுலா நாட்டின் அதிபர் ஹுகோ செவேஸ்யை பதவி நீக்கம் செய்யக் கோரியும், புதிய அதிபருக்கான தேர்தலை உடனடியாக நடத்தக் கோரியும் காராகாஸ் நகரில் நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்ட மக்கள்கூட்டம்.

# கென்யாவில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

(கார்ட்டும்)

சூடான் அரசிற்கும் பிரிவினைவாத இயக்கத்திற்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்படி நாளை முதல் இவ்யுத்த நிறுத்தம் அமுலாக்கப்படும்.

கென்யா மைக்கல் நெல்ரில் நேற்று முனதினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்தே இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக சமாதானப் பேச்சு வார்த்தைகளிற்கான ராஜதந்திர லஸாரோஸீம் பரிகோ தெரிவித்தார்.

.இவ் ஒப்பந்தம் மூலம் 19 வருட காலமாக இருந்து வரும் சிவில் யுத்தம் முடிவிற்கு வந்து சமாதானம் ஏற்படும் என்றும் பேச்சுவார்த்தை முடிவிற்கு வரும்வரை இவ் ஒப்பந்தம் அமுலில் இருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு-02)

## றொக்கட் வெடித்து சிதறியது

(மொஸ்கோ)

பெயர் குறிப்பிடப்படாத இரகசிய றொக்கட் ஒன்று வான்நோக்கியெழுந்த 29 வது செக்கனில் வெடித்துள்ளது விண் வெளி ஆய்வு நிலையத்திற்கு தேவையான பொருட்களை ஏற்றிச் சென்ற போது இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. (சு-02)

## உலக தரிசனம்

## அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு

(வாஷிங்டன்)

அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் சக்திகளுக்கு எதிராகப் போர் நடத்தப் புதிய இராணுவத் திட்டங்களை உருவாக்குமாறு பாதுகாப்புத் துறை அமைச்சர் ரொனால்ட் றம்பீல்ட் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஈராக் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் இராணுவத்தின் பிராந்திய தளபதிகளிற்கே இவ்வுத்தரவினைப் பிறப்பித்துள்ளார். (சு-02)

# ஈராக் ஜனாதிபதியாக மீண்டும் சதாம்

(பக்தாக்)

ஈராக்கின் ஜனாதிபதியாக தொடர்ந்தும் பதவிவகிப்பதற்கு அந்நாட்டு மக்கள் சதாம் ஹுசைனிற்கு அனுமதி வழங்கியுள்ளனர். சதாம் ஹீசைனின் பதவிக் காலத்தை நீடிப்பது தொடர்பாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் சகல ஈராக்கிய வாக்காளர்களும் வாக்களித்தனர் இதில் அனைவரும் சதாம்ஹீசைனிற்கே ஆதரவாக வாக்களித்ததாக பக்தாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கை சதாம்ஹீசைன் கடந்த 23 வருடங்களாக ஆட்சிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை ஈராக்கில் இடம்பெற்ற இத் தேர்தலை நிராகரிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. (சு-02)

# கூடங்குளம் அணுமின் திட்டம் இந்தியா - ரஷ்யா கையொப்பம்

(புதுடில்லி)

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள இரண்டு அணுமின் நிலையங்களுக்கான இறுதி ஒப்பந்தத்தில் இந்தியாவும் ரஷ்யாவும் நேற்று கையெழுத்திட்டன.

100கோடி அமெரிக்க டாலர் செலவு மதிப்பீட்டிற்கான மூன்று ஒப்பந்தங்களில இருதரப்பினரும் கையெழுத்திட்டனர். ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் கையெழுத்தான இந்த ஒப்பந்தங்களின் படி அணுமின் நிலையத்திற்கான அடிப்படை உபகரணங்களை தயாரிப்பது, கொண்டு வருவது, நிர்மாணத்திற்கு தேவையான முக்கிய உபரிகளை பெறுவதற்கு ஒப்பந்தங்கள் கோரப்படும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாக ஆட்டம் ஸ்ட்ராய் எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் தலைவர் ஈவ்ஜெனி ரோடின் ரஷ்யாவின் இடார் டாஸ் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

கூடங்குளத்தில் நிறுவப்படவுள்ள 1000மெகாவோட் உற்பத்தித்திறன் இரண்டு அணுமின் நிலையங்களை உருவாக்க ஆகக் கூடிய மொத்தச் செலவு 260கோடி அமெரிக்க டாலர்கள் ஆகும். அதில் 54விழுக்காடு திட்டச் செலவை தொழில்நுட்ப கடனாக இந்தியாவிற்கு ரஷ்யா வழங்கும். இதனடிப்படையில் அணுமின் உலைக்குத் தேவையான உபகரணங்களும். சேவைகளும் ரஷ்யா வழங்கும். அதுமட்டுமன்றி, அணுமின் உலைக்குத் தேவையான அணு எரிபொருளை 40ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றிக்கு 15.7கோடி டாலர் செலவில் ரஷ்யா வழங்கும்.

இந்தியாவில் தற்பொழுது இயங்கி வரும் 14அணுமின் நிலையங்களை நிர்மாணித்த இந்தியாவின் தொழில் நுட்ப வலலுநர்கள், 5.7கோடி டாலர் செலவில் அமைக்கப்படும் கூடங்குளம் அணுமின் நிலையத்தையும் நிர்மாணிப்பார்கள். ஆனால் கட்டுமானம் முழுவதும் ரஷ்யாவின் அணுமின் நிலைய வல்லுநர்கள் கண்காணிப்பில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# ஈராக் மீதான தாக்குதலுக்கு பிரித்தானிய மக்கள் ஆதரவு

(பக்தாத்)

ஈராக் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என வலியுறுத்தி வந்த பிரித்தானிய மக்கள் தற்போது தாக்குதல் நடத்துவதற்கு வேண்டிய ஆதரவினை வழங்குவதற்கு முன் வந்துள்ளனர்.

இந்தோனேஷிய மாலேதீவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினையடுத்தே இவர்கள் ஆதரவு வழங்கத்தீர்மானித்துள்ளனர். ஈராக்மீது தாக்குதல் நடத்த முன்னர் 10வீத ஆதரவினையே வழங்கிவந்தனர் தற்போது இவ் ஆதரவு 42 வீதமாக அதிகரித்துள்ளது என பிரித்தானிய கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (சு-02)

# மாலேதீவில் நடமாடிய பாகிஸ்தானியர்கள் பொலிஸாரால் விசாரணைக்கு அழைப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் மாலேதீவில் நடமாடிய 10 பாகிஸ்தானியர்களைக் கடந்த மாதம் விசாரணை செய்ததாகக் கூறிய இந்தோனேஷியப் பொலிஸார் அவர்களை மேலும் விசாரிக்க நேரிடலாம் எனத தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் 181 பேரை பலி கொண்டதும்300ற்கும் மேற்பட்டோரைக் காயமடையச் செய்ததுமான இருபாரிய குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து இவர்கள் மீண்டும் விசாரிக்கப்படலாம் என பொலிஸார் கூறியுள்ளனர்.

குண்டு வெடிப்பு இடம்பெற்ற மாலதீவை அண்மித்துள்ள நுஷாடுவா பகுதியில் 10 பாகிஸ்தானியர்கள் பகிரங்க உரையாற்றியதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இவர்களிற்கும் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கும்இடையில் தொடர்பு இருக்கின்றதாக தகவல்கள் கிடைதுள்ளதையடுத்து மீண்டும் அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சு-02)

## காஷ்மீரில் நடைபெற்ற மோதலில் 6 பயங்கரவாதிகள்பலி ஒருவர் காயம்

(காஷ்மீர்)

ஜம்மு- காஷ்மீரின் எல்லைப் புறத்திலுள்ள கோனிஸ் கயூரி மாவடடத்தில் நடைபெற்ற மூன்று தனித்தனி மோதல்களில் 6பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதுடன் படைவீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் 12.30 மணியளவில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் திடீரென மஸ்கார் பீரங்கிகளைப் பயன்படுத்தி இந்திய நிலைகள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியபோதே 6 பயங்கரவாதிகள் கொலலப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-02)



இந்தோஷேியாவின் புகழ்பெற்ற தீவான பாலி தீவில் சுற்றுலா பயணிகள் அதிகமாகக் கூடும் குட்டா மாவட்டத்தில் இரவு நேர விடுதி ஒன்றில் அடுத்தடுத்து நிகழ்ந்த கார்க் குண்டு வெடிப்பில் வெளிநாட்டவர்கள் உட்பட 200பேர் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்ட கட்டிடம்.

## 7ஆம் பக்கத் தொடர்ச்சி .....


(ஆ) 8cm ஆரையுடைய பித்தளைக் கோளமொன்றினை உருக்கி 2cm ஆரையுடைய கோளங்கள் தயாரிக்கப்பட்டன.

i) தயாரிக்கக் கூடிய சிறிய கோளங்களின் எண்ணிக்கையைக் காண்க.

ii) பெரிய கோளத்தின் மேற்பரப்பளவு சிறிய கோளமொன்றின் பரப்பளவைப் போல எத்தனை மடங்கு ஆகும்.

iii) தயாரிக்கப்பட்ட சிறிய கோளங்களின் மொத்த மேற்பரப்பளவு பெரிய கோளததின் மேற்பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும்?

10.




நிலைக்குத்தாக நிற்கும் கொடித்தம்பமொன்றின் அடியிலிருந்து 30m தூரத்தில் கிடைத்தரையிலுள்ள ஒரு புள்ளிக்கு நேர் மேலே 1.45m உயரத்திலுள்ள ஒரு புள்ளியிலிருந்து கொடித்தம்பத்தின் உச்சியின் ஏற்றக் கோணம் 35° ஆகக் காணப்பட்டது.

(அ) கொடித்தம்பத்தின் உயரம் யாது?

(ஆ) தம்பத்தின அடியிலிருந்து 30m தூரத்தில் நிலத்திலுள்ள புள்ளியிலிருந்து அதன் உச்சியின் ஏற்றக் கோணத்தைக் கணிக்க.

(இ) கொடித்தம்பத்தின் நுனியையும் அடியிலிருந்து 30m தூரத்தில் நிலத்தில் உள்ள புள்ளியையும் இணைக்கும் கோட்டின் நீளம் யாது?

# இன்று ஒரு தகவல்

## தாவும் மனிதர்கள்

உழைப்பும், நேர்மையும் உயர்வதற்கு வழிகள் அதை விட்டு விட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே உயரப்போக வேண்டும்என்று ஆசைப்படக் கூடாது பலர் அப்படித்தான் கற்பனைசெய்கிறார்கள் அந்தக் கற்பனையிலேயே பாதிவாழ்க்கைஓடிப் போய் விடுகிறது. உழைப்பு என்கிற வழியையும், நேர்மை என்கிற வழியையும் ஒதுக்கி விட்டு. . . குறுக்கு வழியில் ஓட நினைக்கிறவர்கள் குப்புறவிழுந்து விடுகிறார்கள். எந்தத் தொழிலை நாம் செய்தாலும் சரி, அந்தத் தொழிலுக்குரிய பெருமையை நாம் புரிந்து கொண்டு அதில் ஈடுபடவேண்டும்.

அப்படி இல்லாமல் 'என்ன சார் பிழைப்பு இது. . .இந்தத் தொழிலை மனிதன்செய்வானா? என்று புலம் பிக் கொண்டே இந்தத் தொழிலையே செய்து கொண்டிருக்கிறவர்கள் நம்மவர்களில்பலர் உண்டு. செய்யும் தொழிலே தெய்வம். இப்படிச் சொல்வது எதற்காக? அந்த அளவுக்கு அதில் ஓர் ஈடுபாடு வேண்டும் என்பதற்காகத்தான்,

ஒரு பெரிய மலைப்பகுதி, அந்த மலையடி வாரத்தில் ஒருசிற்பி உட்கார்ந்து ஒரு சிலையைப் வடித்துக் கொண்டிருக்கிறான். கையில் ஒரு சின்ன உளியை வைத்துக் கொண்டுஒருபெரிய கருங்கல் பாறையைகொஞ்சம்கொஞ்சமாக உடைத்துக் கொண்டிருந்தான். ஒரு சிற்பத்தை வடிப்பதென்பது அவ்வளவு உன்னதமான ஒருதொழிலா? எல்லோராலும் முடியுமா? அப்படி இருந்தும் அந்தச் சிற்பிக்கு மனநிறைவு இல்லை. அவன் நினைத்தான் இந்தக் கடுமையான வெயிலில் உட்கார்ந்து வேலை செய்வது எவ்வளவு கடினம்? நாம் ஒரு சிற்பியாக இருப்பதனாலே தானே சூரியன் கடுமையான வெப்பக்கதிர்களை நம் மீது வீசுகிறான்: நாமே அந்தச் சூரியனாக இருந்து விட்டால் அந்தக் கஷ்டம் இருக்காதே ... நம்மைக் கஷ்டப் படுத்துகிறவன் நம்மை விட வலிமையுள்ளவன். அதனால் நாம் அவனாக மாறி விடுவது தான் நல்லது. இப்படி அந்தச் சிற்பி நினைத்தான். அவன் எண்ணம் உடனே நிறைவேறியது.

இயற்கையென்னும் மாபெரும் சக்தி அவனை ஒரு சூரியனாக மாற்றி விட்டது. சிற்பி ஒரு சூரியனாக மாறினான். 'இனிமேல் இந்த உலகத்தில் நம்மை விட வலிமை உள்ளவன் வேறு யாரும் கிடையாது' என்று நினைத்தான். அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்த மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்க வில்லை. கொஞ்ச நேரத்தில் ஆகாயத்தில் கரிய மழை மேகங்கள் சூழ்ந்து வந்தன. சூழ்ந்து வந்த மேகங்கள் சூரியனை மறைத்தன.

இப்போதுசூரியனாகஇருந்த அந்தச் சிறபி நினைத்தான் 'என்ன இது... என்னையே இந்த மேகம் மூடிமறைக்கிறதென்றால் ... அது என்னை விடப் பெரிய ஆளாகத்தான் இருக்கவேண்டும். அதனால் இனிமேல் நாம் சூரியனாக இருக்கக் கூடாது. நாம் மேகமாகத்தான். இருக்கவேண்டும். அதுதான் கௌரவம்' என்று நினைத்தான். இப்போதும் இயற்கை அவன் ஆசையை நிறைவேற்றி வைத்தது. சூரியனாக இருந்த சிற்பி மேகமாக மாறினான், வான வீதியில் உல்லாசமாக உலாவரத் தொடங்கினான். அந்த உல்லாசமும் அதிக நேரம் நீடிக்கவில்லை.

எதிரே பிரமாண்டமான மலைகள் வழியை அடைத்துக் கொண்டு நிற்கின்றன. வேகமாகச் சென்ற மேகம் மலையிலே மோதிக் கொண்டு விட்டது. அந்தமலையைத் தாண்டி அப்பால் செல்ல முடியவில்லை, இப்போது அந்த மேகம் நினைத்தது நாம் எந்தத் தடையுமில்லாமல் அந்தரத்தில் மிதந்து வருகிறோம், நம்மையே தடுக்கிறது என்றால் அந்த மலைக்கு எப்பேர்ப்பட்ட வலிமை இருக்க வேண்டும்? இனி மேலும் நாம் மேகமாக இருந்து பயனில்லை. இருந்தால் மலையாக இருக்க வேண்டும் அதுதான் பெருமை இப்போதும் இயற்கை அவனது ஆசையை நிறைவேற்றி வைத்தது. மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறிவிட்டான். பெரியமலை பூமிக்கும் வானத்துக்குமாக நின்று கொண்டிருக்கிறது இனிமேல் நமக்கு எந்தக் கவலையும் இல்லை என்று நினைத்தது அந்தமலை. இப்படி நினைத்துக் கொண்டிருந்த வேளையில் அதன் காலடியில் அடிவாரத்தில்- ஏதோ சத்தம் கேட்டது.

'என்ன சத்தம் இது' என்று அந்தமலை மெல்லக் குனிந்து பார்த்தது. அங்கேஒருமனிதன் தன்கையில் உளியை வைத்துக் கொண்டு மலையைக் கொத்திக் கொண்டிருந்தான். ஏதோ ஒருசிற்பத்தை வடிக்க அவன் முயன்றுகொண்டிருக்கிறான் இப்போது அந்தமலைநினைத்தது. மலையையே ஒருவன் உடைக்கிறான்என்றால்அவன் எப்பேர்ப்பட்ட வலிமைமிக்கவனாக இருக்கவேண்டும் இனி மேலும் மலையாக இருந்து பிரயோசனமில்லை. மனிதனாக மாறவேண்டும். அதுதான் சரி என்று நினைத்தது.

அடுத்த வினாடியே அந்த மலை ஒரு மனிதனாக மாறியது. அவன் கையிலேஓர் உளி பழைய படியே ஒரு கருங்கல் பாறையைக் கொத்தஆரம்பித்தான். அந்த ஆள் இந்தக்கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? தன்னுடைய உண்மையான பலம் என்னஎன்பது தெரியாமலே தாவித் தாவித் தடுமாறிக் கொண்டிருக்கிறான் மனிதன்- என்பது தான். இனிமேலாவதுஅதைப் புரிந்து கொள்வோம். புறப்படுவோம்.

ஒருகுடும்பத் தலைவருக்கு விபரீதமாக ஓர் ஆசை வந்தது அதாவது ஒருநாள் பூராவும் புடவை கட்டிக் கொண்டு, மனைவிசெய்கிறவீட்டுவேலைகள், சமையல் வேலைகள் எல்லாம் தானே செய்யவேண்டும் மனைவிக்கு ஆண்வேடம் போட்டு ஆபீசுக்கு அனுப்பி விடவேண்டும். இதுதான் அந்த ஆசை. அதே மாதிரிச் செய்தார். பெண்வேடத்தில் சமையல் செய்து கொண்டிருந்தார் இருட்டி விட்டது. இந்தச் சமயத்தில் வாசல் கதவு தட்டப்படுகிறசத்தம் கேட்டது. ஓடிப் போய்த் திறந்தார்.

பக்கத்து வீட்டு அம்மா கிடுகிடு என்று உள்ளே வந்துவிட்டாள் காப்பிப் பொடியோஎதுவோ வாங்குவதற்காக! இவர் பயந்துபோய் 'கமலா அம்மா! நான் சுசீலா இல்லை. சுசீலாவினுடைய புருஷன்... பெண் வேடத்தில் இருக்கிறேன். சும்மா ஒரு மாற்றத்துக்காக என்றார்.

உடனே அந்த அம்மாகிட்ட வந்து 'பயப்படாதே! நானும் கமலா இல்லை: கமலாவினுடையபுருஷன்: இதுவும்சும்மா ஒரு மாற்றத்துக்காக' என்றார்.

★

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

---

பொதுக்கல்விக்கான

# தேசியக் கொள்கைகள் பற்றிய முன்மொழிவு தயாரிப்பு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம், பிரடறிச் ஈபேட்மன் றம், சர்வதேச கல்வியகம் என்பன இணைந்து எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை கொழும்பு-7 கெக்டர் கொப்பேகடுவ விவசாயப்பயிற்சி நிலையத்தில் பொதுக்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பான முன்மொழிவுகளைத்தாயாரிப்பதற்கான வதிவிடச் செயலமர்வைநடத்த விருக்கின்றன.

தேசியக் கல்வி ஆணைக்குழுவின் வேண்டுகோளுக்கிணங்க, எதிர் காலத்தில் பொதுக்கல்வி தொடர்பான திட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்காக இச் செயலமர்வில் அறிக்கைதயாரித்து இம் மாத இறுதியில் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும்என இக்கருத்தரங்கிற்கான இணைப்பாளரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான த. மகாசிவம் தெரிவித்தார்.

இச் செயலமர்வில் வளஆளணியினராக கொழும்புபல்கலைக்கழக பேராசிரியர் சோ. சந்திரசேகரம், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்டவிரிவுரையாளர் எம். சின்னத்தம்பி, தேசியகல்வி ஆணைக்குழுவின் உதவிப்பணிப்பாளர் உ. நவரத்தினம், தேசியகல்வி நிறுவனத்தின் தமிழ்பிரிவுப் பணிப்பாளர் தை. தனராஜ் தீவகக் கல்விவலயப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், வட—கிழக்குமாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல்பணிப்பாளர் எஸ். நவரெத்தினராசா பரீட்சைத்திணைக்களத்தின் உதவி ஆணையாளர் நாயகம் ஜி. போல அன்ரனி, உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ரி. முருகுப்பிள்ளை, யாழ். கல்வி வலய முதன்மை ஆசிரியர் ச. இரவீந்திரநாதன் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கிருபானந்தம், வி. தியாகராசா, எஸ். எஸ். சங்கரன், சி. ரி. இராஜேந்திரம், எஸ். யோகராசன் ஆகியோரும் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தாய்ச் சங்க மாவட்ட நிர்வாகிகளும்கலந்துகொள்ளவுள்ளனர்,

- கட்டாயக் கல்விச் சட்ட மூலத்தை நடைமுறைப் படுத்தல்.
- நடைமுறையில் உள்ள கல்விச் சீராக்கங்களும், அவற்றின் அமுலாக்கமும்.
- பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் கொள்கை.
- நாடளாவிய ரீதியிலான பாடசாலைப் பரம்பல், பாடசாலை அமைப்பு, பாடசாலைகளின் தரவகை, பாடசாலைகளின் வர்க்கம் ஆகியன குறித்து இதில் ஆராயப்படவுள்ளது. (உ)

---

## உதவு பொருட்கள்

(தென்மராட்சி)

சேவாலங்கா நிறுவனம் மட்டுவில் மத்தி (ஜே / 312) கிராம சேவையாளர் பிரிவில் 285 குடும்பங்களுக்கு மண்வெட்டி, கத்தி, அலவாங்கு, கோடரி, விதை நெல், மற்றும் உணவுப் பொருட்களை கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (உ-77)

---

## இராசி பலன்

17-10-2002
(புரட்டாதி 31, வியாழன்)
துவாதசி முழுவதும்
சதயம் மு. இ 11.05 வரை
இராகு காலம்- 1.32-3.02
நல்ல நேரம்- 7.32-9.02

**மேடம்**
கௌரவமான நிலை, செய் தொழிலால் லாபம், எடுத்த காரியம் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி.

**இடபம்**
இனிய சம்பவம், தொழில் முன்னேற்றம், அதிக யோசனை, முயற்சி பலிதம்,

**மிதுனம்**
பிரயாணம், உடல் உழைப்பு, வயிற்றுக் கோளாறு, வீண் பயம்,

**கடகம்**
விருந்துபசாரம், நண்பர்கள் விரோதம், காரிய இடையூறு, உறவினர் உதவி.

**சிங்கம்**
கௌரவமான நிலை, திடீர் பயணம், குடும்பத்தில் சந்தோசம், காரிய நன்மை.

**கன்னி**
சந்தோசமான சம்பவம், உடல் நலம், எடுத்த காரியம் கைகூடும், தனவரவு.

**துலாம்**
பிரயாண இடையூறு, காரிய தாமதம், சொததுக்களால் கவலை, வியாபார நன்மை.

**விருச்சிகம்**
தாய்வழி உறவு, கல்வியால் மேன்மை, ரோகபயம், காரிய தாமதம்.

**தனுசு**
அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, தனவரவு.

**மகரம்**
உடல் நலக்குறைவு, வீண் விவாதம், காரிய தாமதம், தொழில் கஷ்டம்.

**கும்பம்**
போசனசுகம், நல்லமுயற்சி, நண்பர்கள் உதவி, சயன சுகம்.

**மீனம்**
பிரயாணக் கஷ்டம், பிதா சிந்தை, ரோகநிலை, முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது)

வளவன்

---

பாராளுமன்ற உறுப்பினர்களை

# ஜனாதிபதி சந்திரிகா குறை கூறுவது தவறு

### றிச்சட் பத்திரன குற்றச்சாட்டு

(கொழும்பு)

19 வது அரசியல் யாப்பின் சீர் திருத்தம் பற்றி எந்தவொரு கேள்வியும் எழுப்பக் கூடாதென ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தீர்மானம் எடுத்துள்ளவேளையில், ஜனாதிபதி அதுகுறித்து பாராளுமன்ற உறுப்பினர்களை குறைகூறுவது ஏன் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் றிச்சட்பத்திரன வினா எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி, மற்றும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே, ஏ. எச். எம். பௌஸி, உட்படதானும் ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்துவிட்டதாகவும்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு இருவாரங்களுக்கு முன்னர் எடுத்த தீர்மானத்தின்படி, ஜனாதிபதி கட்சியின் அங்கத்தவர்களைகுறைகூற முடியாது எனவும் பத்திரன தெரிவித்துள்ளார். (உ)

---

# மக்களின் பொறுமைக்கு படையினர் பாராட்டு

(திருகோணமலை)

காஞ்சிரம்குடா திருகோணமலை படுகொலை சம்பவங்களிற்கு எதிராக திருமலை மக்கள் வன்முறையில் இறங்காதமை குறித்து கடந்தசெவ்வாய்க்கிழமைபடையினர் ஒலிபெருக்கி மூலம் அவர்களுக்கு நன்றியுடன் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி காஞ்சிரம் குடாப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியமையைக் கண்டித்தும் 11 ஆம் திகதி திருகோணமலையில் நடந்த படுகொலை சம்பவத்தைக் கண்டித்தும் எவ்விதமான வன்முறையிலும் இறங்காது மக்கள் அமைதியான முறையில் துக்க தினமும் ஹர்த்தாலும் அனுட்டித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

---

# புலிகளை மதிக்காமையே யுத்தம் மூளக் காரணம்

### அமைச்சர் ஆறுமுகன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகளின் சுய கௌரவம், மரியாதை, பலம் என்பவற்றை கடந்த கால அரசுகள் துச்சமாகமதித்ததனால் தான் யுத்தம் மூண்டது.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

கட்டடப் பொருள்கள்கூட்டுத் தாபனத்தின் 40 வது கிளையை கல்முனையில் நேற்றுமுன்தினம் காலை திறந்து வைத்துஉரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது;

கடந்த கால அரசுகளின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் மாறாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவினால் மேற் கொள்ளப் பட்டு வரும்இம்முயற்சிகளுக்கு இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் தொடர்ந்தும் முழுஆதரவையும் வழங்கி வரும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது சுய கௌரவம் விட்டுக்கொடுக்கப்படமாட்டாது.

சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் செயற்படுவதன் மூலமே இந்நாட்டில் சுயமரியாதையுடன் உரிமைகளைபெற்றுவாழ முடியும்என தெரிவித்துள்ளார். (உ-8)

## காவிரி நீர் பிரச்சினையால்

# தமிழக விவசாயிகள் படும் துன்பம்

# ஈழத் தமிழரையும் பாதித்துள்ளது

### அமைச்சர் மகேஸ்வரன் தமிழக முதல்வருக்கு கடிதம்

(கொழும்பு)

மொழி, கலசாரம், பண்பாடு, சமயம் ஆகியவற்றால் தமிழ்நாடும் தமிழீழமும் வரலாற்றுக்கு முந்திய காலம் முதல் பிணைக்கப்பட்டுஇன்று வரை உணர்வுகளால் இரு நாடுகளிலும் வாழும் மக்கள் ஒரே மக்களாக வாழ்ந்து வருகின்றனர். எமக்கிடையே ஒருவருக்கொருவர் அனுபவிக்கும் துன்பத்திலும் இன்பத்திலும் மற்றவர் வாழாவிருக்க முடியாது என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்தவகையில் இன்று தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்கள் காவிரி நீர் பிரச்சினையால் அடைந்து கொண்டிருக்கும் துன்ப, துயரம் ஈழத்தில் வாழும் தமிழ்மக்களை பெரிதும் பாதித்துள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசாங்கத்தில் இலங்கைத் தமிழர்களின் ஒரே பிரதிநிதியாக அங்கம் வகிப்பவன் என்ற முறையில் இலங்கைத் தமிழ்மக்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்காக இக்கடிதத்தை எழுதுகிறேன்.

வேளாண்மையை தமது பாரம் பரியத் தொழிலாக கொண்டுள்ளஇலட்சோபலட்சம் தமிழ் நாட்டு விவசாயிகள் கர்நாடகமாநில அரசின் விடாப்பிடியான செயலினால் ஆற்றொணா இன்னல்களை) அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியும் பொழுது நமது மக்கள் துயரப்படாமல் இருக்கமுடியாது.

தமிழ்நாடு உங்கள்தலையில் அளப்பரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அவ்வாறே காவிரி நீர் பிரச்சினையில் நீங்கள் எடுத்து வரும் உறுதியான பல நடவடிக்கைகளை ஈழத்தமிழராகிய நாம் மனமாப் பாராட்டுகின்றோம். நீங்கள் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எமது ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் உண்டு. காவிரி நீர்விரைவில் தமிழ் நாட்டுமண்ணில்பாயவேண்டுமென ஈழத்தமிழர்கள் பிரார்த்திக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நல்வாழ்வு நிதியங்களுக்கு அமைச்சர் மகேஸ்வரனின் ஊதியம் பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய அலுவல்கள் அமைச்சர் தி மகேஸ்வரன் தனது மாதாந்த சம்பளத்தினை விழிப்புலனற்றோர் நல்வாழ்வு நிதியங்கள் இரண்டுக்கு அன்பளிப்பாக வழங்குமாறு தனது அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு விழிப்புலனற்றோர் இல்லம் (தரிசனம்) மற்றும் சுன்னாகம் மருதனார்மடம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம் (வாழ்வகம்) ஆகிய இரண்டு நிலையங்களுக்குமே அமைச்சர் தனது பதவிக்கான மாதாந்த சம்பளத்தை இரு பகுதிகளாக பிரித்து வழங்க முன்வந்துள்ளார். (உ)

## ஆயுதங்களை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை நெடுங்குளம் சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் கடந்த மாதம் மீட்கப்பட்ட ஆயுதங்களை இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்துமாறு யாழ் மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செனவிரட்ணாவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணை கடந்த செவ்வாய் யாழ் நீதிமன்றில்நடைபெற்ற போது ஆயுதங்களைமறைத்து வைத்திருந்ததான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரான அ.அருள்ஞானசீலன் என்பவரை இம்மாதம் 28 ஆம் திகதிவரை மேலும் விளக்க மறியலில் வைக்குமாறும்,

ஆயுதங்களை இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்தி அதன் அறிக்கையை அடுத்த மாதம் 11 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (உ-10)

## சிங்கப்பூர் வர்த்தகசமூகம் வர்த்தக நடவடிக்கையை இலங்கையில் ஆரம்பிக்கும்

(கொழும்பு)

இலங்கையில் புதிய வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க சிங்கப்பூர் வர்த்தக சமூகம் முன்வந்துள்ளது.

இலங்கை முதலீட்டுச்சபையின் அதிகாரிகளுக்கும், சிங்கப்பூர் பிரதிநிதிகள் குழுவுக்கும், இடையில சமீபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே சிங்கப்பூர் வர்த்தக சமூகம் இதற்கு முன்வந்துள்ளது;

இக்கலந்துரையாடலின் போதுசிங்கப்பூர் எயர் போஸ்ட்சல்பர் மெற்றிக்தனியார்நிறுவனத்தின் தலைவர் கருத்து தெரிவிக்கையில்;

தற்போதைய சமாதான சூழ்நிலைகளை அடுத்து, மேலும் அதிகஎண்ணிக்கையான வர்த்தக நடவடிக்கைகளை இங்கு மேற்கொள்வதற்கு தீர்வைகளை அரசு குறைக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-8)

## சமாதான விடயத்தில் பிரதமரும்- பிரபாவும் உறுதியாக உள்ளனர்

### அமைச்சர் ஜயலத் தகவல்

(கொழும்பு)

தற்போதைய சமாதான நடவடிக்கைகளினை குழப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், பிரதமரும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் இது குறித்த விடயத்தில் உறுதியாக உள்ளனர்.

புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்புமாவட்டத்துக்குவிஜயம் செய்தஅமைச்சர், அங்குபுனித மைக்கல் தேசிய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசு, சமாதானப் பாதை கரடுமுரடானது என்பதை உணர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இன-மதபேதமின்றிஅரசின் சமாதான முயற்சிகளுக்கு யாவரும் உதவ வேண்டும்.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், பிரதமரின் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகீர் மௌலானா ஆகியோரும் கலந்து கொண்டனர் (உ- 8)

## தரநிர்ணய சபைக்கு நிவாரண அரிசியை அனுப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உலர் உணவு நிவாரணப் பணிகள் குறித்து யாழ்ப்பாணம் வந்துள்ள அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகள் நிவாரணவிநியோகத்திற்கென பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேர்ந்துள்ளஅரிசியின் மாதிரியைதர நிர்ணய சபைக்கு அனுப்பநடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அத்தியட்சகர் கே.இராஜ நாயகம் கப்பல் பிரிவு ஆலோசகர் பி பாலசுப்பிரமணியம் ஆகியோரே மேற்படி அரிசியை நேரில் சென்று பார்வையிட்டு, தர நிர்ணயம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நிவாரணப்பணிகள் குறித்து இவர்கள் அரசஅதிபர் செ பத்மநாதனையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## பாராட்டிக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு இடம்பெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இணுவில் இந்துக்கல்லூரி மாணவர்கள் பத்துப் பேரையும், அவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழா அண்மையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர் சங்க ஏற்பாட்டில் இடம்பெற்றது. (உ)

## கட்டாக்காலி நாய்கள் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 8.00 மணி தொடக்கம் நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப-அலுவலகம், மற்றும் கொக்குவில் உப-அலுவலகம் என்பவற்றின் எல்லைக்குட்பட்ட வளாகவீதி, பலாலி வீதி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதிப்பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும்,

வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தகடுகளை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் பிரதேச சபையின் தலைவர் க.மணிபல்லவராஜன் அறிவித்துள்ளார். (உ)

## நற்சிந்தனை பாராயணம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நற்சிந்தனை பாராயணம் செய்யப்பட்டு மதியம் மகேஸ்வர பூசை இடம் பெறவுள்ளது. (உ)

## வாணிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையின் வருடாந்த வாணிவிழா நிகழ்வுகள் பாடசாலையின் பிரதானமண்டபத்தில் அதிபர் எஸ்.நடராஜலிங்கம் தலைமையில் சிறப்பாக நடை பெற்றது.

கலைநிகழ்வுகளாக மாணவர்களின் இசை, நடன, நாடக நிகழ்வுகளும் ஆசிரியர்களின் பட்டிமன்றமும் இடம்பெற்றது. (இ)

## பொது சுகாதார பரிசோதகர் முறைப்பாடு

(மந்திகை)

வல்வெட்டித்துறை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். சிவாகரன் இனந்தெரியாத இருவர் தன்னைத் தாக்கியதாக வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி உடுப்பிட்டிப் பகுதியால், சென்று கொண்டிருந்த போது, சைக்கிளை மறித்து இருவர் தன்னைத் தாக்கியதாக தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பில் இருந்துவல்வெட்டித்துறைக்கு அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5,23)

## உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறைக்கோட்பாடு விளக்கம்

(ஈச்சமோட்டை)

உள் நாட்டிலே இடம் பெயர்ந்த மக்களுக்கு வசதி வாய்ப்புகளை வழங்கும் நெறிமுறைக் கோட்பாடுகள் பற்றிய விளக்கமளிப்பு பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம் பெற்றது.

இணையத்தலைவர் தலைமையில் ஆரம்பமான இப் பயிற்சிப்பட்டறையில் பல அரசசார்பற்றநிறுவனப்பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மனிதநேய சேவைகள் அமைப்புகளின் கூட்டிணைய ஏற்பாட்டில் தமிழர் புனர்வாழ்வு கழக அனுசரணையுடன், நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் இடம் பெயர்ந்தோர் பெறக் கூடிய வசதி வாய்ப்புகள்மற்றும்தனி மனிதனுக்கு அவசியம் கிடைக்க வேண்டியவசதி வாய்ப்புக்களான உணவு, வசிப்பிடம், கல்வி, சுகாதார வசதி, சமூகஉளவியல், தண்ணீர், பொதுவசதிகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இதில் கலந்து கொண்டவர்களுக்கு கைநூல் தகவல் திரட்டு சொத்துக்கள் உசாத்துணைகள் வழங்கப்பட்டன.

எதிர்காலத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்கும் போதுஇதிலுள்ள சர்வதேச நியதிகளை கடைப்பிடிக்க அனைத்து அரசசார்பற்றபிரதிநிதிகளும் விழிப்புடன் உழைக்க வேண்டும் என்பதே இப்பயிற்சிப் பட்டறையின் நோக்கமாகும். (உ-59)

## விலைக் குறைப்பை அமுல் செய்க

(கொழும்பு)

இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து வற்வரி நீக்கப்பட்டு புதிய விலையில் சகல மருந்துப் பொருட்களும் விற்கப்பட்டு வருகின்றன. இவ் விலைக் குறைப்பை உதாசீனப்படுத்தி பழைய விலையில் மருந்துப் பொருட்களை விற்போர் தொடர்பான தகவல்களை உடனடியாக தெரிவிக்கும்படி அமைச்சர் ரவி கருணாநாயக்க பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

மருந்துப் பொருட்களுக்கான வற்வரி நீக்கம் அமுல்படுத்தப்பட்ட போதும் தமது கையிருப்புக்களை முடித்துக் கொள்ளும் வகையில் மருந்து விற்பனையாளர்கள் ஒரு மாத கால அவகாசத்தினைக் கோரியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-77)

## குளவிகள் கொட்டி காயம்

(அச்சுவேலி)

வீழ்ந்து கிடந்தகாவோலைகளை இழுத்த சமயம் அதனுள் இருந்த குளவிகள் கொட்டியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய் மாலை புலோலி தெற்கு சாரையடியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கண்கள், கைகளில் குளவி கொட்டிய நிலையில் வே.சுப்பிரமணியம் (வயது-92) மகன் சு.தங்கநவமணிநாதன் (வயது-48) ஸ்ரீ சந்திரா (வயது-41) இவரது பிள்ளைகளான ஸ்ரீ.இளங்கீரன் (வயது-9) ஸ்ரீ.சேரன் (வயது-7) ஆகிய ஐவருமே மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-14

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2002
# General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002

ஆக்கம்: சி.டியு.க் பல்குணவல்லா
(ஆசிரியர், யா/மல்லாகம் மகா வித்தியாலயம்)

ஒரு மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**


01. 1kg சீனியின் விலை ரூ.37.50 ஆகும் 500g சீனியின் விலை யாது?

02. பின்வருவனவற்றை ஏறுவரிசையில் எழுதுக. $\frac{3}{4}$ , $\frac{4}{5}$ , $\frac{2}{3}$

03. பின்வரும் எண்களின் வித்தியாசம் யாது?
0.423, 0.79

04. என்னிடம் ரூபா a உள்ளது அதில் எனது தங்கைக்கு ரூ.10ஐக் கொடுத்தால் எஞ்சிய தொகையைக்காட்டுவதற்கு அட்சரகணித கோவையை எழுதுக.

05. பின்வரும் எண்களில் மிகச்சிறிய எண் எது?
0.09, 0.078, 0.2, 0.1662





06. Oவை மையமாகவுடைய வட்டம் ஒன்றின் விட்டம் AB ஆகும். N என்பது பரிதியில் உள்ள புள்ளியாகும் AO=OB=BN=1 அலகு ஆகும் ANஇன் நீளம் யாது?

07. சுருக்குக $x^{10} \times x^{-4}$

08. $x$a = $x$b - y இல் yஐ எழுவாயாக மாற்றுக.

09. படத்தில் நிழற்றிய பகுதியை தொடைக் குறியீட்டில் எழுதிக் காட்டுக.





10. $3x + y = 1$ இனால் காட்டப்படும் நேர் கோட்டின் படித்திறன் யாது?

11. சுருக்குக. $1\frac{1}{2} \div \left[\frac{4}{5} - \frac{1}{2}\right]$


12. தீர்க்க:- $3 + 2(x-1) = 5$

13. படத்தில் PQRS ஓர் வட்ட நாற்பக்கல் எனின் $x$ , y இன் பெறுமதி காண்க.




14. சுருக்குக:- $\frac{12.5 - 1.25}{12.5}$

15. அருகில் உள்ள படத்தில் M N இன் நடுப்புள்ளி $x$, MO வின் நடுப்புள்ளி y எனின் $x$y : NO இன் விகிதம் யாது?





16. $\sqrt{2} = 1.414$ எனின் $\sqrt{(2)^3}$ இன் பெறுமானம் யாது?

17. $-2 < x \leq 4$ என்னும் சமனிலியை எண் கோட்டின் மீது குறிக்க

18. வட்டப் பூப்பாத்தி ஒன்றின் பரிதி 88m ஆகும் அதன் ஆரையைக் காண்க (ஆரை r ஆகவுள்ள வட்டத்தின் பரிதி $2\pi r$ ஆகும். $\pi = \frac{22}{7}$ எனக் கொள்க)

19. 3, 5, 2, 6, 7, 6, 5, 6, 2 என்ற தரவுத் தொகுதியின்
i) ஆகாரம் யாது?
ii) இடையம் யாது?

20. (i) அருகே உள்ள உருவில் $x$ இன் பெறுமதியைக் காண்க.
(ii) $A\hat{C}D$ இன் பெறுமானம் யாது?





21. $x^2 - 6x$ என்னும் இருபடிக் கோவையை நிறை வர்க்கமாக்குவதற்கு கூட்டவேண்டிய மாறா உறுப்பைக் காண்க. அக்கோவையை நிறைவர்க்க வடிவில் எழுதுக.

22. ஒரு வகுப்பறையை சுத்தப்படுத்துவதற்கு 9 பிள்ளைகளிற்கு 15 நிமிடம் எடுக்கின்றது. அப்பணியைச் செய்துமுடிப்பதற்கு 12 பிள்ளைகளிற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடமாகும்?


23. ஆரைகள் முறையே 2cm, 4cm உடைய இருவட்டங்களின் பரப்பளவுகளிற் கிடையிலான விகிதத்தைக் காண்க.

24. A,B என்பன தேசப்படம் ஒன்றில் குறிக்கப்பட்ட இரு நகரங்களாகும். Bயில் இருந்து பார்க்கும் போது Aயின் திசைகோள் 215° எனின், Aயில் இருந்து பார்க்கும் போது Bயின் திசைகோள் யாது?





25. பொருள் ஒன்று விற்கும் போது குறித்த விலையில் 12% கழிவு கொடுக்கப்படுகின்றது. அப்பொருளின் குறித்த விலை ரூ.400 எனின் விற்பனை விலையைக் காண்க.

26. உருவில் உள்ள தரவுகளிற்கு ஏற்ப $A\hat{D}B$யைக் காண்க.




27. நேர்கோடு ஒன்றின் படித்திறன் -2உம் y அச்சின் மீதுள்ள துண்டு +3 உம் ஆகும் நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.

28. தரப்பட்டுள்ள உருவின் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.




29. $\sqrt{3} = 1.732$ எனின்,
(i) $\sqrt{\frac{27}{3}}$, (ii) $3\sqrt{\frac{12}{2}}$ ஆகியவற்றின் பெறுமானங்களைக் காண்க.


30. Oவை மையமாகவுடைய வட்டம் ஒன்றில் AB என்பது 8cm நீளமுள்ள மாறும நாணாகும் இவ்வட்டத்தின் ஆரை 5cm எனின் ABயின் நடுப்புள்ளியின் ஒழுககு யாது?

## பகுதி - II

3 மணி

**முதலாம் வினா உட்பட எட்டு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. (I) (a) (2x-5) (x+7) =0 இன் தீர்வுகள் எவை? (b) $x^4 - x$ இனைக் காரணிப்படுத்துக.
(c) $7x-8= kx +12$ என்னும் எளிய சமன்பாட்டின் தீர்வு 5 எனின் k இன் பெறுமதியைக் காண்க. (6புள்ளி)




(II) (a) BY இன் நீளத்தை ac இன் சார்பில் கூறுக.
(b) BXYZ இன் பரப்பளவை △ABC இன் பரப்பளவின் என்ன பங்கு எனக் கூறுக.
(c) $BC = \sqrt{7}$ cm, AB= 3cm எனின் AC இன் நீளத்தைக் காண்க (9 புள்ளி)

(III) $x = 2^3 \times 3^2 \times 5$, $y = 2^2 \times 3^2 \times 5^2$ எனின்
(a) $x$, y இன் பொ.ம.சி காண்க.
(b) $x$,y இன் பொ.கா. பெ காண்க.
(c) $x$, இனை எந்த மிகச்சிறிய எண்ணினால் பெருக்க கிடைப்பது ஒரு நிறை வர்க்கமாகும். (6புள்ளி)

(IV) (a) 12,16, $x$, 18 ஆகிய எண்களின் இடை 15 எனின் $x$ இன் பெறுமானம் யாது?
(b) 6,7,8, 10, 12, 16, என்ற பரம்பலின் மூன்றாம்காலணை எது?
(c) 2/6 இல் எத்தனை பதினைந்தின் கூறுகள் உள்ளன? (9புள்ளிகள்)

(V) 6 232 496 என்பது ஓர் எண்
(a) இவ்வெண்ணின் இலக்கச் சுட்டி யாது?
(b) இவ்வெண்ணினை சொற்களில் எழுதுக.
(c) இவ்வெண்ணினை விஞ்ஞான முறைக் குறியீட்டில் தருக. (6புள்ளி)

(VI) கப்பலொன்றின் கம்பத்தில் hஅடி உயரத்திற்கு ஒருவன் ஏறினால் கடலில் dமைல் தூரத்திற்குப் பார்க்கலாம். அப்போது $h=\frac{2d^2}{3}$ ஆகும்.
(a) அவன் 6 மைல் தூரத்திற்கு பார்க்க வேண்டுமாயின் கம்பத்தில் ஏற வேண்டிய உயரம் என்ன?
(b) கம்பத்தில் 54 அடி உயரத்திற்கு ஏறினால் அவன் எவ்வளவு தூரம் பார்க்கலாம் (6புள்ளி)

02. அ) காரணிப்படுத்துக: $3c^2 - c - 14$ (ஆ) தீர்க்க: $2x - 3y = 5$
$3x - 4y = 8$
(இ) $3x^2 + 6x - 2 = 0$ என்ற சமன்பாட்டை நிறைவர்க்கமாக்கித் தீர்த்து விடையை இரண்டு தசமதானங்களில் தருக.


03. (அ) முதன்மைக் காரணிகளின் வலுக்களாகத் தந்து சுருக்குக.
$27^{1/3} \times \frac{1}{125^{2/3}}$
(ஆ) 2 log X + 3 log 2= 2 log 3 + 1/2 log 16 + log 2
இனை மடக்கை அட்டவணை பாவிக்காது தீர்க்க.
(இ) மடக்கை அட்டவணையை உபயோகித்து பெறுமானம் கணிக்க. விடையை முதலாவது தசம தானத்திற்குத் திருத்தமாகத் தருக.
$$\frac{2.83 \times \sqrt{472}}{51.6 \times 1.03}$$

04. கிராமமொன்றிலுள்ள விவசாயிகளில் பாகல் மட்டும் பயிரிடுவோர் 20பேர், பயிற்றை மட்டும்பயிரிடுவோர் 4பேர், கத்தரி மட்டும் பயிரிடுவோர் 10பேர், பாகலும் பயிற்றையும் பயிரிடுவோர் 18பேர்,பயிற்றையும் கத்தரியும் பயிரிடுவோர் 12 பேர், பாகலும்,கத்தரியும் பயிரிடுவோர் 15பேர், பாகல் பயிரிடுவோரின் மொத்த எண்ணிக்கை 45 பாகல் பயிரிடாதோரின் எண்ணிக்கை 25 பாகல் பயிற்றை கத்தரி ஆகிய மூன்றையும் பயிரிடுவோரின் எண்ணிக்கை $x$ எனக் கொண்டு
(அ) வென் உருவில் தகவல்களைக் காட்டுக.
(ஆ) பாகல், பயிற்றை,கத்தரி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை மட்டும் பயிரிடுவோரை காட்டும் பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக.
(இ) $x$ இல் ஒரு சமன்பாடமைத்துத் தீர்க்க.
(ஈ) எத்தனை பேர் கத்தரி பயிரிடுகிறார்கள்?
(உ) பாகல்,பயிற்றை, கத்தரி என்பவற்றுள் ஒன்றையேனும் பயிரிடாதோர் எத்தனை பேர்

05. ஒருவன் 2வருடங்களில் கடனைத் திருப்பிச் செலுத்துவதாகக்கூறி வருடம் 10%கூட்டு வட்டிக்கு ரூ 30000ஐ கடனாகப்பெற்றான்.
(அ) முதலாம் வருட இறுதியில் செலுத்தப்படும் வட்டி எவ்வளவு?
(ஆ) இரண்டு வருட முடிவில் கடனைத் தீர்க்கச் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?
(இ) இரண்டு வருட முடிவில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமற் போனதால் மேலும் 9மாதங்களின் பின் ரூ 40383.75 ஐச் செலுத்திக் கடனிலிருந்து விடுபட்டான். இறுதி 9 மாதங்களுக்காக அறவிடப்பட்ட வருட வட்டி வீதம் யாது?

06 (அ) இரு நேர் கோடுகள் ஒன்றையொன்று வெட்டும் போது உண்டாகும் குத்தெதிர்க் கோணங்கள் சமனானவை என நிறுவுக.

அருகேயுள்ள உருவில் AB// CD நேர் கோடு EH ஆனது AB,CD என்பவற்றை முறையே FG என்பவற்றில் வெட்டுகிறது. AFE இன் இரு கூறாக்கி FIஆகும். நீட்டப்பட்ட IFஉம் FGDஇன் இரு கூறாக்கியும் O இல் சந்திக்கின்றன.
i) AFI இற்கு சமனான கோணம் எது?
ii) EFI இற்கு சமனான கோணம் எது?
iii) GFO, BFO என்பன சமனெனக் காட்டுக.
iv) FOG இன் பருமன் யாது?




(ஆ) புத்தகமொன்றை 20% கழிவுடன் ரூ200இற்கு வாங்கினேன்.
(i) புத்தகத்தின் குறித்த விலை யாது? (ii)வியாபாரி 25% லாபம் அடைந்தால் வியாபாரியின் கொள்விலை யாது?


07. கூலிக்குத் தேங்காய் பிடுங்கும் ஒருவர் சில நாட்களில் பிடுங்கிய தேங்காய்களின் விபரம் பின்வருமாறு தேங்காய்களின்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை. | 20-30 | 30 - 40 | 40 - 50 | 50 - 60 | 60 - 70 |
| மீடிறன்(நாட்கள்) | 3 | 5 | 6 | 9 | 2 |

(அ) 40 - 50 என்ற வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு 'விலகல்' முறையில் ஒரு நாளில் பிடுங்கப்பட்ட தேங்காய்களின் இடை எண்ணிக்கையைக் கிட்டிய முழுவெண்ணில் காண்க.
(ஆ) தேங்காயொன்று பிடுங்குவதற்கான கூலி ரூ.0.50 எனின் அவனது நாட்கூலியின் இடைப்பெறுமானத்தைக் கிட்டிய ரூபாவில் காண்க..
(இ) குறித்த காலத்தில் அவர் பிடுங்கிய தேங்காய்களின் எண்ணிக்கையைக் கிட்டிய பத்துகளில் தருக.

08. (அ) கூட்டல் தொடரொன்றின் முதலுறுப்பு10, கடைசிஉறுப்பு 126, கூட்டுத்தொகை2040
i) உறுப்புகளின் எண்ணிக்கை யாது? ii) பொது வித்தியாசம் யாது?
(ஆ) நான்காவது உறுப்பு 24, எழாவது உறுப்பு 192ஆகவுள்ள பெருக்கல் தொடரின்
i) பொது விகிதம் யாது? ii) முதலுறுப்பு யாது?

09.




அ)வாகனமொன்றின் முன்கண்ணாடி துடைப்பான் (WINDSCREEN WIPER) 40cm நீளமான புயத்தைக் கொண்டது. அதிற் பொருத்தப்பட்ட இரப்பர் அலகின் நீளம் 30cm. துடைபபான 120° கோணத்தினூடாகச் சுழன்று திரும்புமெனின் இரப்பர் அலகினால் துடைக்கப்படும் பரப்பளவைக் கணிக்க.

04ஆம் பக்கம் பார்க்க.....

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர்

# அன்ரன் பாலாவை கொழும்பு வர அனுமதித்த ரணில் ஒரு துரோகி

## ஜே. வி. பி. பிரசார செயலர் விமல் வீரவன்ச கோபாவேசம்

(கொழும்பு)

சகல செய்தி ஊடகங்களையும் பிரதமரின் ஆதரவாளர்களும், அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் கட்டுப்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச நேற்று முன்தினம் கொழும்பு ஹைப்பார்க்கில் நடந்த கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இலங்கை வந்த போது அவரது வருகையை பத்திரிகைகள் கண்டித்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் அன்ரன் பாலசிங்கம் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக வன்னி சென்றமை குறித்து அதே பத்திரிகைகள் மௌனம் சாதிப்பது ஏன்? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சர்வதேச விமான நிலையத்தைத் தாக்கி அழிப்பதற்கு காரணமாக இருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின், அரசியல் அலோசகருக்கு அதே விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

அத்துடன், அவரையும் அவரது பாரியாரையும் விமானப் படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் வன்னிப் பிராந்தியத்துக்கு அனுப்பி வைத்துள்ள பிரதமர் ரணில் ஒருதேசத்துரோகி என்று காட்டமாக விமர்சித்தார்.

தொடர்ந்தும் கூறுகையில்;

பலஸ்தீனத்தை அழிக்கக் காரணமாக உள்ள துரோகியின் மகன் தான் எரிக்சொல்ஹெய்ம். இங்கும் அந்நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை போல ஏற்படுத்தவே சொல்ஹெய்ம் சமாதானம் என்ற போர்வையில் பிரவேசித்துள்ளார்.

எப்பாடுபட்டாலும் இங்கு சமாதானம் மலரப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். (உ-8)

## கோழிவளர்ப்பாளர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில்உள்ளகோழிப் பண்ணையாளர்களின் நன்மை கருதி அவர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்குகளை தென்பகுதியில் உள்ள தனியார்கால்நடை ஸ்தாபனம் ஒன்றின் அனுசரணையுடன் நடத்த பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. வ. வசீகரன் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

யாழ். குடாநாட்டின் கோழிப்பண்ணையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்து இக்கோழி வளர்ப்பில்ஈடுபடுபவர்களிற்கு உதவி வழங்கவும்நடவடிக்கைகளை மேற் கொண்டுவருவதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-10)

## அனுருத்த விவகாரம் ஜனாதிபதி மீது மீண்டும் ஐ.தே.மு.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளை தூதுவர்களாக நியமிப்பதற்கு மறுத்துவரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்அனுருத்த ரத்வத்தைக்கு எதிரான எந்த விதநடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என ஐக்கிய தேசிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக கருத்து தெரிவிக்கையில்;

முன்னாள் அமைச்சரின்வங்கிப் பெட்டகக் கணக்குகள், கடந்த கால ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பாகவும்,

அதே காலப்பகுதியில்அவர் மின்சக்தி எரிபொருள்அமைச்சராக இருந்த வேளையில் மின்சார நெருக்கடிகள் ஏற்பட்டபோது அதற்காக ஜெனரேட்டர்களை கொள்வனவு செய்தபோது ஏற்பட்ட ஊழல்கள் குறித்தும்;

ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

இன்று கவிஞர் கண்ணதாசனின் நினைவு தினம்

# முதலுக்கு மேல் அரண்மனையில் தெய்வமுள்ளது முடிவுக்குக் கீழ் சிறையில் சைத்தான் இருக்கிறது

**கவிஞர் கண்ணதாசன்**

பார்த்ததைப் பற்றி வர்ணிப்பதை விட, பார்க்காததைப் பற்றிப் பேசுவது சுலபமானது; சுவையானது.

முதலுக்கு மேலே முடிவுக்குக் கீழே யாரும் பார்த்ததில்லை.

வேதங்களும், ஞானிகளும் சொல்லுவதுபோல் இந்த இரண்டிலும் தான் இறைவன் இருக்கிறான்.

எது மனிதன் கண்ணுக்கு எட்டவில்லையோ, அது தெய்வம்.

எது மனித சக்திக்குப் பிடிபட வில்லையோ அது தெய்வ சக்தி.

முதலும் தெரிகிறது; முடிவும் தெரிகிறது.

ஆனால், மேலும் தெரியவில்லை; கீழும் தெரியவில்லை.

ஆத்திகனுக்கும் புரியவில்லை; நாத்திகனுக்கும் புரியவில்லை.

ஆத்திகன் இறைவன் என்கிறான்; நாத்திகன் இயற்கை என்கிறான்.

சூன்யத்தைப் பற்றிய விவாதம் சுவையாக நடந்து கொண்டிருக்கிறது.

இருட்டுக்குகையில் நுழைந்த மனிதன் தடவித் தடவிப்பொருள் கண்டுபிடிப்பது போல், தீராத இந்தக் கேள்விக்கு தினந்தினமும் ஒவ்வொரு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

இந்த இரண்டு வழிகளும் இல்லையென்றால் இலக்கியத்தில் பாதி இல்லை.

### மயக்கம் மூழ்கிக்கிடக்கிறது

தெளிவாகத் தெரியும் பொருள் பற்றி இரண்டு சிந்தனை இல்லை.

தெளியாத பொருள்மீதே சிந்தனை தினமும்படர்கிறது.

கற்பனை வளம் பெருக வேண்டுமென்றே இந்தச் சூன்யம் பிறந்தது.

தத்துவஞானம் வளர வேண்டுமென்றே அது தடந் தெரியாமல் அமைந்தது.

பதிலில்லாத கேள்வியாகவே இது இன்றுவரை நிலைத்திருக்கிறது.

பனித்திரைக்குள்ளே மூடிக்கிடக்கும்பச்சைக்கொடிபோல் முதலுக்கு மேலும் முடிவுக்குக் கீழும் மயக்கம் மூழ்கிக் கிடக்கிறது.

இந்த இரண்டு வழிகளும் புரிந்துவிட்டால், பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

பிறப்பும் அறுந்துபோகும்; இறப்பும் அறுந்துபோகும்.

இப்போதிருக்கும் மனிதர்களே எப்போதும் இருந்து கொண்டு, கலகங்களை வளர்த்துக்கொண்டிருக்கலாம்.

ஆனால், அப்படி ஆகக் கூடாதென்றே இந்தச் சூன்யம் தோன்றிற்று.

உலகம் மாறி மாறி அமைய வேண்டுமென்றே இது கண்ணுக்குப் புலப்படாமல் போயிற்று. அனைத்தையும் வென்ற விஞ்ஞானிகளே இதை வெற்றிகொள்ள முடியவில்லை. பிறப்பும் இயற்கை; இறப்பும் இயற்கை என்று சுலபமாகச் சொல்லி விடுகிறான் நாத்திகன்; எது அந்த இயற்கை? அது தானாகவே உண்டானது என்கிறான் நாத்திகன். தானாக என்றால் எப்படி?

எங்கிருந்தோ கிளம்பிற்றென்கிறான் நாத்திகன். எங்கிருந்து?

நாத்திகன் விழிக்கிறான்.

எல்லாம் தானாக உண்டாயிற்றென்றால், குழந்தை ஏன் பூமியிலே தானாக உண்டாவதில்லை?

தாயொருத்தி தந்தையொருவன் ஏன் தேவைப்படுகிறது?

உண்மையில் ஒவ்வொரு பிறப்புக்கும் மூலமிருக்கிறது. மூலத்துக்கு மூலம் சூன்யத்தில் இருக்கிறது

அந்தச் சூன்யத்திலிருக்கிற பயத்தினாலே தான் மனித வர்க்கம் வித விதமாக மாறுகிறது.

சொத்துச் சேர்க்கவென்று பித்துப் பிடித்து அலைபவனும் செத்துப் போவோமென்று பயப்படுகிறான்.

சாகாமல் இருப்போமென்று நினைக்க முடியவில்லை.

அதற்கப்புறம் என்னாகுமோ? நாமிறந்து விட்டால் வாரிசுகள் கதியென்னவோ? இவற்றையவன் சிந்திக்கிறான்.

இறந்த பிற்பாடு அவன் குழந்தைகளைப் பார்க்கப் போகிறானா? இல்லையென்றே அவன் திடமாக நம்புகிறான்.

முடிவுக்குக் கீழே அவன் அமரப்போகும் இடம் எது என்று அவனுக்குப் புரியவில்லை.

அதைச் சிந்திக்கும்போது தான் ஞானம் பிறக்கிறது.

### சித்தார்த்தன் துறவியானது ஏன்

மெத்தென்ற பஞ்சணையில் மெல்லியலாளோடு, மனக்கவலை சிறிதுமின்றி வாழும் வழிபடைத்த சித்தார்த்தன் எதை எண்ணித் துறவியானான்?

முதலுக்கும் முடிவுக்கும் இடைப்பட்ட உலகம்அவனை வஞ்சிக்கவில்லை.

எந்தச்சுகத்தையும்அவனுக்கு மறுக்கவில்லை. நினைத்ததை நினைத்தவுடன் பெறக் கூடிய வசதிகளை அவன் படைத்திருந்தான். துறவு கொள்ளும்படி அவனைத் தூண்டியது எது? காமத்தைவெறுக்கும்படி அவனுக்குக் கற்றுத்தந்தது எது? பெற்ற பிள்ளையை விட்டுப் பிரியும்படி அவனைப் பிணைத்து இழுத்தது எது? நரை, திரை, மூப்பு வரு முன்னாலே நானிலசுகத்தை வெறுக்கச் சொன்னது எது? போரில் தோற்று விரக்தியடைந்தானா? பொருளை இழந்து கவலைகொண்டானா? சித்தர்களைப் போல் அனுபவித்து ஒய்ந்தபின்புலம்பி அழுதானா? இளமைத் துறவுக்கு இவனை இழுத்துச் சென்றது எது?

இல்லாதவனெல்லாம் கிடைக்காதா என்று ஏங்கும் சுகத்தைப் பிறப்பிலேயேபெற்றவன் தூக்கி எறிந்தானே, ஏன்? அவன் சூன்யத்தில் நியாயத்தைக் கண்டான். எங்கிருந்து வந்தோம்; எங்கே போகிறோம் என்று தெரியாமல் இருக்கும் நிலையிலேயே மனிதர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களை அவன் கண்டான், 'ஆடாதீர்மானிடரே; உம்மை அடங்க வைக்கும் மரணம் என்று எச்சரித்தான். சாகப் பிறந்த மனிதன் தர்மத்தோடு சாக வேண்டுமென்று அவன் நினைத்தான். தர்மத்தை மனிதருக்குச் சொல்லப்புறப்பட்டான். இதுதான் சாவென்று தெரியாத மனிதனுக்கு, இதுதான்வாழ்வென்று கற்றுக் கொடுத்தான். எப்படி வாழ்ந்தாலும் ஒரு பிடி சாம்பல் தான். இப்படி வாழ்ந்தால் இருக்கும் வரை நல்லபெயரென்று போதித்தான்.

தர்மத்தில் அவனுக்கென்ன அவ்வளவு அக்கறை? முடிவுக்குக் கீழே தோன்றிய சூன்யம் அவன் எண்ணங்களை ஒழுங்குபடுத்திற்று.

அங்கே ஒரு வேளை ஆண்டவன் இருப்பானோ? தவறு செய்பவர்களைத் தண்டிப்பானோ? அப்படி என்றால்? வாழும் மனிதனை தர்மத்தோடு வாழச் செய்ய வேண்டும். சாகும்வரைதான் அரசனுக்கவன் குடிமகன். முடிந்த பிற்பாடு சூன்யத்தில் உறுப்பினன். சித்தார்த்தன் சூன்யத்திற்கும் தானே அரசனாக விரும்பினான். புத்தனானான்!

### சூன்யம்

வாழ்பவனுக்கு எதுவும் நியாயமே. இறந்தவனுக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

உளளத்தால் பொய்யா
தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்

குறள்

# வலம்புரி

## இந்தியாவுக்கு விழுந்த பலத்த அடி

தாய்லாந்தில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருகை தந்து தலைவர் பிரபாகரனுடன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

எதிர்வரும் 31 ந்திகதி தாய்லாந்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக ஆலோசகர் பாலசிங்கம், தலைவர் பிரபாகரனைச் சந்திப்பது சமாதான முயற்சியில முன்னேற்றகரமான ஓர் சூழ்நிலை என்பதோடு' இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்ற தீர்வுத் திட்டத்தின் அமைப்பு வெளிவரலாமென்ற எதிர்வு கூறலுக்கும் வகை செய்துள்ளது.

அதேவேளை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறுகின்ற பேச்சுக்கள் முன்னேற்றகரமாக அமைந்துள்ள தென்பதை அன்ரன் பாலசிங்கத்தின் வன்னிப் பயணம் வெளிப்படுத்துகிறது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற முதற் கட்டப் பேச்சுக்களுக்கு முன்னதாக அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வந்திருந்தார். அப்போது அவர் மாலைதீவில் இருந்து கடல் ஆகாய விமானம் மூலம் வன்னிப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு முன்னர், வன்னிக்கு வருகை தந்திருக்கும்பாலசிங்கம்கொழும்பு கட்டுநாயக்கா ஊடாக தனது பயணத்தை மேற்கொண்டாரெனில் அது சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், நம்பகத்தன்மையையும் காட்டி நிற்கிறது.

இவ்வாறு கலாநிதி அன்ரன்பாலசிங்கம்கொழும்பு ஊடாக வன்னி வந்தமை இந்தியாவுக்கு விழுந்த பலத்த அடியாகும்,

ஆலோசகர் பாலசிங்கம் இலண்டனில் இருந்து இந்தியாவூடாக வன்னி செல்வதற்கு உதவுமாறு இந்திய அரசைக் கோரியிருந்த போதிலும் மத்திய அரசு மறுப்புத் தெரிவித்தமைக்கு கொழும்பு ஊடான பயணம் பலத்த அடியே.

---

# புதிய அரசியல் கலாசாரம் உருவாகுவதற்கு

# தேசிய இனங்கள்யாவும் ஒத்துழைப்பது அவசியம்

தென்னாசியாவிற்கான மனித உரிமைகள் மன்றத்தின் செயலாளர்நாயகம்'' ரபன்குமார் போசே'' சண்டே ஒப்சேவர் ஆங்கில நாளிதழுக்காக ''இலங்கையில் சமாதான செயன்முறைகள்'' என்ற தலையங்கத்தில் வரைந்த கட்டுரையின் தமிழ் வடிவம்.

தமிழில்:
**உருவில் ம. மயூரன்**

இலங்கையில் போர் ஒரு முடிவுக்கு வந்துள்ளது. இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கைத் தமிழருக்கான தாயக உரிமை பற்றிய அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைகளை தொடங்கியிருக்கிறார்கள். இந்த இடைக்காலத்தில் தற்போது இரண்டு வெவ்வேறான சக்திகள் இலங்கையில் தொழிற்பட்டுக் கொண்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது; கடந்த வாரங்களில் தாய்லாந்தில் ஆரம்பமான அரசியல் பேச்சுவார்த்தைகளினூடாக தன்னாதிக்கத்துக்கான வரைமுறைகள், சுயாட்சி, தமிழர் தாயகத்தினுடைய அதிகார பரவலாக்கங்கள் என்பன பற்றி தீர்மானிக்கப்படும்வரை வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களுடைய உண்மையான அதிகாரங்களை வெளிப்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது;

### தாயகம் எவ்வாறு அமையும்?

தற்போதுள்ள கேள்வி என்னவென்றால் தமிழர்தாயகத்துக்கான கோரிக்கையை இலங்கையினுடைய அரசியல் அமைப்பு வேலைகளுக்கு உட்பட்டதாக எவ்வாறு ஆக்க முடியும் என்பதே; இந்த தாயகம் இனம் சார்ந்த அல்லது தேசியம் சார்ந்த அடிப்படையில் அமைக்கப்படுமா அல்லது வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுமா? வடக்கு தமிழர்களின் தாயகமாக அமையப் போகின்றதென்றால் தெற்கிற்கும் மேற்குக்குமான அரசியற் செயற்பாடுகளுக்கான அடையாளங்கள். எவ்வாறு அமையப் போகின்றன? இலங்கைக்குடியரசில் எஞ்சிய பகுதிகளில் சிங்களத் தாயகத்துக்கான கோட்பாட்டை எதிர்காலத்தில் தடுக்கக் கூடியதாக இருக்குமா? தமிழர் தாயகத்தில் வாழப்போகின்ற தமிழரல்லாதோர், முஸ்லிம்கள், சிங்களவர்களுடைய அந்தஸ்து எவ்வாறு இருக்கப் போகின்றது. இதேபோல தென்பகுதிகளிலும் மேற்குப் பிரதேசங்களிலும் தமிழர்களுடைய நிலை எவ்வாறு இருக்கப்போகின்றது? இந்த வேறுபட்ட தாயகங்களில் அரசியல் கட்சிகள் எவ்வாறு உருவாக்கப்படப் போகின்றன, இனரீதியான அடிப்படையிலா அல்லதுஅரசியல் கருத்துகளின் அடிப்படையிலா? எந்தக் கொள்கைகளின் அடிப்படையில்காணிஉரிமைகள் மாற்றிக் கொடுக்கப்படப்போகின்றன. எவ்வாறு இவைகட்டுப்படுத்தப்படவோ அல்லது சீராக்கப்படவோ போகின்றன? தமிழர்கள் தென்பகுதிகளில்காணிகளை வாங்கி குடியேற அனுமதிக்கப்படுவார்களா? இதேபோல சிங்களவர்கள் வடக்கில் இவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுவார்களா? இதேபோன்ற பல விடயங்கள் இக்கட்டத்தில் தெளிவு படுத்தப்பட வேண்டியுள்ளன.

தென்னாசியாவில் தாயகக் கோரிக்கைகள் சுயநிர்ணயம், தன்னாட்சிபோன்றவை பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே இருந்து வருகின்றன. இலங்கை தமிழர்கள்தங்களை ஒரு சிறுபான்மையினராக எண்ணக்கூடாது என நான் நினைக்கிறேன். அவர்கள் தங்களையொரு மொழியின் மூலமாகவும் சரித்திர பூர்வமாகவும் பிணைக்கப்பட்டு வாழ்கின்ற தேசமக்களாக உரிமைகோருகிறார்கள்; தமிழர் தாயகத்துக்கான கோரிக்கைக்கு இந்திய சீக்கியர்களின் அனுபவங்களை நல்லதொரு கருத்தாக முன்வைக்கலாம் என நினைக்கிறேன்.

### சீக்கிய அகாலிதள்

1970 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலிருந்த சீக்கியர்களுடைய அரசியல் கட்சியான 'அகாலிதள்' தங்களுடைய மாநிலமானது கூடிய அதிகாரங்களை கொண்ட, சிறுபான்மையினருக்கு அவற்றைவழங்கக் கூடியதாக அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட வேண்டுமென்று மத்திய அரசிடம் ஒரு அரசியல் தீர்வொன்றை முன்வைத்தது: இது 'அனந்பூர் சாகிப் தீர்வுத் திட்டம்'என அழைக்கப்பட்டது: நான்கு விடயங்களை தவிர மற்ற விடயங்களில் மத்திய அரசின் அதிகாரங்களை குறைக்கவேண்டும்மென்று அதில்குறிப்பிடப்பட்டது.மத்திய அரசாங்கம்பாதுகாப்பு,வெளி விவகாரங்கள், சர்வதேச வியாபாரம் மற்றும் நாணயப்புழக்கம் என்ற நான்கு விடயங்களில் மாத்திரமே கூடியளவு அதிகாரங்களை கொண்டிருக்கலாம் என்று கூறப்பட்டது. இந்தத் தீர்வுத்திட்டமானது இந்தியாவின் மற்ற மாநிலங்களிலுமிருந்த அரசியல் கட்சிகளால் பெரிதும் வரவேற்கப்பட்டிருந்தது; இருந்தபோதிலும் 'அகாலி தளத்தினுடைய' இந்தக் கோரிக்கை இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை;

இலங்கையில் குடியேற்றவாத ஆட்சிக்குப்பின் காணப்பட்ட அரசாங்க அமைப்பு முறையானது நல்லதொரு முறையில் காணப்பட்டது. மதச்சார்பற்ற, குடியேற்றவாத எதிர்ப்புணர்வு கொண்ட தேசிய ஒற்றுமையானது பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே ஏற்பட்ட ஸ்திரத்தன்மையற்ற நிலையால் பின்பு உடைத்தெறியப்பட்டது. பெரும்பான்மையினர் கலாசார மதப் போர்வை ஒன்றை போர்த்துக் கொண்டு நாட்டின் பெரும்பகுதியை உரிமை கோரினர். இதுவே பிற்பாடு இரத்தக்களரி ஒன்றை ஓடச் செய்ய வழி வகுத்தது.

### சுதந்திரம்

இலங்கை அரசாங்கத்தை இராணுவ பாதையை கைவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேசவைத்ததேவிடுதலைப்புலிகளுடைய பாரிய பங்களிப்பாக இருக்கின்றது. அதே, வேளை புலிகளும் தங்களுக்குரிய அல்லது தாங்கள் அமைக்க விரும்புகின்ற அரசியல் அமைப்பு முறை பற்றியும் பேச வேண்டிய கால கட்டமிது. யுத்தம் விடுதலைக்கான ஒரு போராட்டமாகவே இருந்தது. விடுதலை என்பது அல்லது சுதந்திரம் என்பது வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு தனியானதொரு பாதுகாப்பான தாயகத்தை நிறுவுவதோடு முடிந்து விடப் போவதில்லை. ஒரு சமூகத்தினரால் அரசியல் ரீதியாக அமைக்கப்பட்ட அரசினுடையவெளிப்பாடாக சுதந்திரம் இருக்கிறது. அங்கே அச்சமூகத்திலுள்ள சகல பிரசைகளும் உண்மையான சுதந்திரமுடையவர்களாக இருக்க வேண்டும். தமிழர்களுடைய சுதந்திரமென்பது தென்பகுதிகளிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதன் மூலமே அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம். இலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கிடையில் உள்ள ஐக்கியமும் வரலாற்று ரீதியிலான ஒற்றுமையுமே பேரினவாத தன்மையுள்ள மக்களின் அரசிடமிருந்து அவர்களை காப்பாற்ற முடியும். நீண்ட இருபதாண்டுப் போரால் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டும், சலிப்படைந்தும் உள்ளனர். அவர்களை இதிலிருந்து பாதுகாக்க வேண்டியுள்ளது. இதற்காக புலிகள் தங்களுடைய போர்க் குணத்தை மாற்றி சமாதானத்தை முன்னெடுப்பவர்களாக மாற வேண்டும். அதேபோல இலங்கை அரசும் தனது பேரினவாத போக்கை மாற்ற வேண்டும்: எல்லா தேசிய இனங்களும் ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை பேண வேண்டியது அவசியமாகிறது. அதன் மூலம் அதிக நன்மைகளை அனைவரும் அனுபவிக்க முடியும்.

---


## சாயி அருளமுதம்



நற்குணம்,இரக்கம்,சகிப்புத்தன்மைஇந்தமூன்றுவழிகள்மூலம் ஒருவர் தன்னிலும் பிறரிலும் தெய்வீகத்தைக்காணமுடியும். இருதயத்தின் இளகியதன்மை, (கசிவு) இன்று மக்களால் பலஹீனம், கோழைத் தன்மை, புத்திசாதுரியமின்மையெனக் குற்றம் சாட்டப்படுகிறது. இரக்கத்துக்கும், உதார குணத்துக்கும் எதிராக இதயம்கடினமாக்கப்பட வேண்டுமென அவர்கள் கூறுகின்றனர்; ஆனால் அந்தவழியில்தான் யுத்தம், பேரழிவு, வீழ்ச்சி ஆகியவையிருக்கின்றன. அன்புடைமை என்றும் நிலைத்துநிற்கக்கூடிய மகிழ்ச்சியையும், அமைதியும் வழங்கும். பகிர்ந்துகொள்ளுதல் துயரத்தைக்குறைத்து மகிழ்ச்சியைப்பெருக்கும். மனிதன் பகிர்ந்து அனுபவிக்கவும் சேவைசெய்யவும் பிறந்தவனேயன்றி (எல்லாவற்றையும் தனக்கென) பற்றியெடுக்கவன்று. உங்கள் இதயமாகிய கோயிலிலே இறைநம்பிக்கையை அரியதோர் உண்மையாக வைத்திருக்கும்போது அனுகூல, பிரதிகூலங்களினாலேற்படும் பூமாலைகளையும், பொல்லடிகளையும் ஒரேவிதமான துரிதமனப்பாங்குடன் வரவேற்பீர்கள்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை


---

ஆஸி. நிறுவனங்களின் உதவியுடன்

## வடபகுதிக்கான ரயில் பாதைகள் புனரமைப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கான ரயில் பாதையை புனரமைப்பதற்கு உதவஅவுஸ்ரேலியாவில்உள்ள 9 நிறுவனங்கள் முன்வந்துள்ளன;

இதற்கமைய வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையும், மதவாச்சியிலிருந்துதலைமன்னார் வரையுமான இரு நெடும்பாதைகளுக்கான சேவைகள் ஐரோப்பா மற்றும் அவுஸ்ரேலிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பாதைகளை புனரமைப்பதுதொடர்பானஅறிக்கையை அவுஸ்ரேலியரயில்வே நிபுணர் குழுவொன்று கடந்த திங்கட்கிழமை போக்குவரத்துஅமைச்சரிடம் கையளித்துள்ளது.

அவ்வறிக்கையில் ரயில் பாதைகள் மட்டுமன்றி பாலங்கள், ரயில் நிலையங்கள் தங்குமிடவிடுதிகள் என்பனவும் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலைகளை அடுத்துகிழக்கு மாகாணத்தின் ரயில் பாதைகளும் புனரமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது; (உ-8)

# வெரித்தாஸ் இயக்குநர் குழு நேற்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பகுதி பொறுப்பாளர் அருட்திரு ஏ.சிங்கராயன், தான் தோம் கலைத் தொடர்பு நிலைய பொறுப்பாளர் அருட்திரு. பெனடிக்ற் மற்றும் பியாற்றோ குயின் ஆகியோர் நேற்று மாலை 5மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

யாழ்ப்பாணம் வருகை தந்த இவர்களில் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பகுதி பொறுப்பாளர் அருட்திரு ஏ.சிங்கராயன் நேற்று மாலை வலம்புரிப்பத்திரிகைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்து ஆசிரியபீடத்தினருடன் கலந்துரையாடினார்.

இதேவேளை இன்று காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆரம்பமாகும் "உறவுகளின் சங்கமம்" நிகழ்வில் இக் குழுவினர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் வெரித்தாஸ் வானொலி நேயர்கள் அன்பர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## ஐரோப்பியத்..........

அமைச்சர் சேர்ந்த செல்வி கலாப் போஷன் டென்மார் தூதரகத்தைச் சேர்ந்த மைக்கல் ஸ்ரேஸ்டே, கிரேக்க நாட்டுத் தூதரகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் மைக்கல் பேபேட் உட்பட ஏனைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இச் சந்திப்பு 2 மணித்தியாலங்கள் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் பின் சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் ஜோய் மகேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.

இப் பேச்சின் போது தமிழர் தாயகப் பகுதியில் கண்ணி வெடிகளை அகற்றுதல் தொடர்பாகக கலந்துரையாடியுள்ளனர். (ம)

# இளஞனுக்கு விடுதலை

(கொழும்பு)

8வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று உயர் நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

நாகமணி தெய்வேந்திரன் என்ற இளைஞரே நேற்று விடுதலை செயயப்பட்டவராவார்.

1996ம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை தள்ளுபடி செய்ததுடன் சந்தேக நபரின் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் கருத்தில் கொண்டு தண்டனை வழங்க முடியாது என உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. (த)

## யாழ் ரெலிக்கொம் வளநிலையை....

வைத்தியர்களுக்கான வதிவிடத்தெலைபேசிகளை வழங்குவதில் ரெலிக்கொம் நிறுவன அதிகாரிகள் இழுத்தடிப்புப் போக்கை கடைப்பிடிப்பதாகவும் முன்னுரிமைக் கட்டணமின்றித் தொலைபேசிகளை வழங்க மறுப்பதாகவும் யாழ் போதனாவைத்தியசாலை வைத்தியர்கள் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் குற்றம் சாட்டி அறிக்கை வெளியிட்டிருந்தனர்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர்மாநாட்டில் ரெலிக்கொம் நிறுவன பொறியியலாளர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த காலத்தில் வைத்தியசாலை நிர்வாகத்தினால் சிபார்சு செய்யப்பட்ட 8வைத்தியர்களுக்கு முன்னுரிமைக் கட்டணம் எதுவுமின்றி வதிவிட தொலை பேசி இணைப்புக்களை வழங்கியுள்ளோம். இத்துடன் வைத்தியசாலை நிர்வாகத்தின் சிபார்சு இல்லர்மல் தனிப்பட்ட முறையில் தொலைபேசிக்காக விண்ணபித்த 5வைத்தியர்களுக்கு முன்னுரிமைக் கட்டணத்துடன் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னுரிமைக்கட்டண அறவீடு தொடர்பாக ரெலிக்கொம் நிறுவனத் தலைமைப் பணிமனையில் இருந்து 6.6.2002 திகதியிடப்பட்ட சுற்று நிருபத்துல் தொலைத் தொடர்பு வசதிகளை வழங்குவதில் முன்னுரிமைக் கட்டணம் ரத்துச் செய்யப்படவில்லை எனவும், அது தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் ரெலிக்கொம் நிறுவன நிறைவேற்று அதிகாரிகளுக்கு மட்டுமே உண்டு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபம் பத்திரிகையாளர்களுக்கும் காண்பிக்கப்பட்டது.

தொலைபேசி இணைப்பைப் பெறுபவர்கள் குறைந்தது மாதம் ஆயிரம் ரூபாவீதம் ஒருவருடம் வரை செலுத்தவேண்டும் இந் நடைமுறை இலங்கை பூராகவும் உள்ளது.

ஒரு தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கு ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா செலவாகிறது. இந்தத் தொகை அவர்களிடமிருந்து அறவிட்டு முடிப்பதற்கு சுமார் 15 வருடங்களாவது எடுக்கும்.

இது ஒருபுறம் இருக்க குடாநாட்டுக்கான தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு அரசாங்கம் எந்தவித நிதியுதவியையும் வழங்குவதில்லை. கடன்களைப் பெற்றே குடாநாட்டில் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான கேபிள்களை இணைக்கும் வேலைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இவ்வாறான வேலைகளைச் செய்து முடிப்பதற்கு நீண்ட காலம் தேவைப் படுகின்றது.

இதேவேளை தற்பொழுது தொலைபேசி இணைப்புக்களைப் பெறுவதற்கு 12ஆயிரம் பேர் விண்ணபித்துள்ளனர் இவர்களில் 5ஆயிரம் பேருக்கு மட்டும் இணைப்புக்களை வழங்கக் கூடியதாகவுள்ளது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க யாழ் போதனாவைத்தியசாலை டாக்டர்கள் அடங்கிய வைத்தியர் சங்கம் ரெலிக்கொம் நிறுவனம் மக்களிடம் பணத்தைச் சுரண்டுவதாகவும், பகற் கொள்ளை அடிப்பதாகவும் கூறுகிறது. இது தொடர்பாக எனது ஆழ்ந்த மனவருத்தத்தை தெரிவித்துக கொள்வதுடன் அந்த வழியில் பொதுமக்களிடம் இருந்து பணத்தைச் சுரண்டினோம், எப்போது சுரண்டினோம் என்பதை மேற்படி சங்கம் தெளிவுபடுத்துவதுடன் ரெலிக்கொம் நிறுவனம் பற்றி பொதுமக்களிடம் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்த முயற்சித்தமை தொடர்பாக தமது விசனத்தை தெரிவிப்பதாகவும் அன்ரனிதாஸன் மேலும் கூறினார். (த)

## உடத்தலவின்ன............

முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, அவரது இருபுதல்வர்களான லோகான், சானுக்க உட்பட 12பேர்கள் ஏற்கனவே கொழும்பு உயர் நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர். சட்ட விரோதமாக கூடியமை, கொலைகளை புரிவதற்கு ஒத்தாசையும் உதவியும் வழங்கியமை உட்பட 72 குற்றச்சாட்டுகள் சந்தேக நபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. (ந)

## அக்கரைப்பற்று..........

அக்கரைப்பற்றுப் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இக்கடத்தல் சம்பவத்தினால் அம்பாறை மாவட்டத்தில் தோன்றியுள்ள பதற்றமான நிலைவரத்தை அடுத்து அக்கரைப்பற்று பொலிசரினால் சமயப்பெரியார்கள் அரசியல்பிரமுகர்கள் சமுக சேவையாளர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பைச்சேர்ந்த பாலா, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்ட மாநாடு ஒன்று கூட்டப்பட்டிருந்தது. இம்மாநாட்டிலே தமிழ்க்கூட்டமைப்பைச் சேர்ந்த சநதிரநேரு எம்.பியும் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு சென்றவர்கள் மீது கற்கள் வீசப்பட்டன. இதன் காரணமாக அப்பிரதேசத்தில் வன்செயல்கள் வெடிக்கலாம் என்ற அச்சத்தினால் அங்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாக முஸ்லிம் மக்களினால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனை விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாலா மறுத்துள்ளதுடன் இதன் உண்மை நிலையை அறியும்வரை முஸ்லிம் மக்கள் அமைதியைக் காக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க இம் மாதம் 9ம் திகதி அம்பாறையில் இடம்பெற்ற மறியல் ஹர்த்தாலின் போது 8 அப்பாவித் தமிழ் மக்கள் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே (ம)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(சுதுமலை)

வலி தென் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் பட்டின சபைப் பகுதியில் இன்று காலை 9 மணிமுதல் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதாக மானிப்பாய் பட்டின சபையின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

வீதிகள் மற்றும் சந்தைப் பகுதிகளில் காணப்படும் நாய்கள் கட்டாக்காலி நாய்களாக கருதப்பட்டு அழிக்கப்படுமெனவும் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் கடந்த மாதம் இருவர் நாய்க்கடிக்கு இலக்காகி மரணமானது குறிப்பிடத்தக்கது. (வ 252)

# கூரை இடிந்து இருவர் காயம்

(கொய்யாத்தோட்டம்)

குருநகர் மத்தய கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றின் கூரை இடிந்து விழுந்ததில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது வீட்டில் இருந்த ஏனையோர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர், காயமடைந்த இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-22)

## ஜனாதிபதியின்........

அவர் பேசுவராயின் அவருக்கு இருக்கும் மதிப்பு மென்மேலும் குறைந்து போய்விடும்.

அரசுத்தலைவர்கள் வேறு எந்தவொரு தலைவரினாலும் தனி மனித பண்புகளையோ, விவகாரங்களையோ இழுத்துப்பேசுதல் கூடாது. சில அமைச்சர்களின் இயல்புகளை ஜனாதிபதி விபரீத விதம் வெறுக்கத்தக்கதாயுள்ளது. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இதுபற்றி வெறுப்படைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)


ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின்



100வது பிறந்தநாள் விழா

இன்று (17.10.2002) வியாழக்கிழமை

மாலை 3.30 மணி

நிகழ்ச்சி நிரல்

- மங்கள விள[illegible]ற்றல
- இறைவணக்கம
- ஒறேற்றர் [illegible]வு கீதம்: திரு. சி.சிவஞானராஜா (இசை ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
- தலைமையுரை : திரு.க.சிவாஜி (அதிபர். ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
- நினைவுரை : திரு. சிவஞானச்சந்திரமூரத்தி (முன்னாள் ஆசிரியர். ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
- சிறப்பு விருந்தினர் உரை:பேராசிரியர் P.புவனராஜா (கொழும்பு பல்கலைக்கழகம். ஒறேற்றர் குடும்ப உறுப்பினர்)
- நினைவுப் பேருரை : பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர். பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்)
- நிறைவுரை : திரு.ஆறுதிருமுருகன் (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஒறேற்றர் குடும்பம்

அதிபர், அசிரியர்கள், மாணவர்கள்
யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்.



# முக்கிய அறிவித்தல்

**தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுக்கள் தெரிவு தொடர்பானது.**

மேற்படி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களின் தெரிவுகள் 10.10.2002ம திகதி உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கமைய 19.10.2002ம் திகதி சனிக்கிழமை நடைபெறும். எனவே வாக்காளர் பட்டியலின்படி அந்தந்த கிளைக்குரிய வாக்காளர்கள், விளம்பரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு குறித்த நேரத்திற்கு தத்தமது கிளைக்குரிய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கு சமூகமளித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அதிகமான வாக்காளர்கள் இடம் பெயர்ந்து வசிப்பதனால் இவ்வறிவித்தலை தங்களுக்குரிய தனித்தனி அறிவித்தலாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

[C/5138]



SALES SALES SALES....

வாடிக்கையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி
தீபாவளியை முன்னிட்டு, லைடனின் மகத்தான மலிவு விற்பனை.
லைடனில் சகல பொருட்களையும் விசேட விலைக் கழிவுடன் வழங்குகின்றோம். இவ்விலைக்கழிவு

15.10.2002 செவ்வாய்க்கிழமை முதல
04.11.2002 திங்கட்கிழமை வரை மட்டுமே.

விரையுங்கள் பயன் பெறுங்கள்

லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.2222381

[C/5140]



# பகிரங்க ஏலவிற்பனை

எம்மிடமுள்ள பின்வரும் விபரப்படியான தேக்கு மரத் துண்டுகள் எதிர்வரும் 25.10.2002ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நவாலியிலுள்ள பனைவள பல் தொழில் பேட்டை வளவில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

1) 227செ.மீற்றர் நீளமுடையது 126 துண்டுகள்
2) 302செ.மீற்றர் நீளமுடையது 105 துண்டுகள்
3) பல்வேறு அளவுகளில் 65 துண்டுகள்

இப் பலகைத்துண்டுகளை கடமை நேரத்தில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்படுபவர் 50% பெறுமதியை உடன் செலுத்துவதுடன் மீதிப் பெறுமதியை ஒருவாரத்திற்குள் செலுத்திப் பலகைத்துண்டுகளையும் அப்புறப்படுத்தல் வேண்டும்.

தலைவர்,
வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி(மட்டு)
பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.

[C/5142]



# கூறுவிலை கோரல்

எமது கொத்தணியின் காரியாலயத்தில் உள்ள றோணியோ மெசின் திருத்தம் செய்வதற்காக அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. காரியாலயக்கடமை நேரத்தில் றோணியோ மெசினைப் பார்வையிட்டு உதிரிப்பாகங்கள் கூலி அடங்கிய வகையில் எதிர்வரும் 24.10.2002ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு முன்னர் கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.

தலைவர்.
வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி.
பிப்பிலிச் சந்தி. மானிப்பாய்.

[C/5141]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.